பதிவு இல. 61 (?) STAFF COPY NOT FOR SALE Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70 நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஆடி மீ 27 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 8 (11 - 08 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY ஒளி: 214

## இன்று மாலை நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தின் பின் பிரேமாவின் முடிவு

கொழும்பு, ஆக. 11

இந்தியப்படை விலகல் விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைஅமைச்சரவை இன்று இரவு 7 மணிக்கு விசேடமாகக் கூடுகிறது.

இந்தக் கூட்டத்தில் இந்தியப் படையை விலக்குவது தொடர்பாக சகல அமைச்சர்களினதும் கருத்தை ஜனாதிபதி பிரேமதாஸா விரிவாகக் கேட்டறிந்து கொள்வார்.

அதன்பின்னர் அமைதிப்படை விலகல் தொடர்பான தனது இறுதி முடிவை ஜனாதிபதி பிரேமதாஸா அறிவிப்பார்.

அமைதிப்படை விடயம் தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு குறித்து திட்டவட்டமான அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ)

## தெற்கில் 48 மணிநேரத்தில் 125 பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஆக. 11

தென்னிலங்கையில் கடந்த 48 மணி நேரத்தில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களில் 125 பேர் வரை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறைப் பகுதியில் 60 பேரும் கண்டியில் 10 பேரும், அவிசாவளையில் 10 பேரும் கொல்லப்பட்டனர்.

செவ்வாய்க்கிழமை யன்று பயாவலையில் 6 பேரும், தலத்துஓயாவில் 5 பேரும் நுவரெலியாவில் 5 பேரும், இரத்தோட்டையில் இருவரும் உயிரிழந்தனர்.

புதனன்று கண்டியில் 16 பேரும், எகலியகொடையில் 7 பேரும், இரத்தினபுரியில் 7 பேரும், மொனராகலையில் 4 பேரும், கெஸ்பேவையில் மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிட்ட ஒருவரும்

(8ஆம்- பக்கம் பார்க்க)

## கண்டியில் இரு வாரங்களில் 1,000 பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஆக 11

கடந்த இரண்டு வாரங்களில் கண்டி மாவட்டத்தில் குறைந்தது ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. லஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

ஜூலை 28 இல் ஒரேசமயத்தில் கண்டிமாவட்டத்தில் 13 இடங்களில் குறைந்தது 30 பேரணிகள் ஊரடங்குச்சட்ட உத்தரவை மீறி நடத்தப்பட்டன. அவர்கள் மீது பாதுகாப்புப்படையினர் சரமாரிகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் பலர் உயிரிழந்தனர்.

அமைச்சர் ரஞ்சன் ஆர்ப்பாட்டங்கள் அமைதியானதாக நடத்தப்படவில்லை. யு. என். பி ஆதரவாளர்களும் நிர்ப்பந்தம் காரண

(8-ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி சம்பவங்களை கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 11

கடந்த வாரங்களில் வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பொது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர், ஆசிரியர், ஊழியர், நிர்வாக உத்தியோகத்தர் சங்கங்களின் இணைப்புக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:-

இச் சம்பவங்களின்போது சுமார் தொண்ணூறு பேர் வரை கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்தும்உள்ளனர். பெறுமதி மிக்க பல பொருள்கள் அழிக்கப்பட்டன. பலர் தமது வீடுவாசல்களையே இழந்துள்ளனர்.

இதைவிட மோசமாக தமது தற்பாதுகாப்புக் கருதி தஞ்சமடைந்த இடங்களிலும் பலர் சுடப்பட்டுள்ளனர். இச் சம்பவங்கள் நாட்டின் சூழ்நிலைக்கான முழுப் பொறுப்பையும் ஏதும் அறியாத அப்பாவிப் பொது மக்கள் மீது வலிந்து திணிக்க முற்படுவனவாகவே

(8ஆம்- பக்கம் பார்க்க)

## பி.டி உஷா ஓய்வுபெறுகிறார்

இந்தியாவின் பிரபல ஓட்ட வீராங்கனை பி. டி. உஷா விளையாட்டு உலகில் இருந்து கௌரவமாக ஓய்வுபெறப் போவதாக அறிவித்திருக்கிறார். (உ-எ)

## சுழற்சி முறை மின் இன்று கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஆக. 11

குடாநாட்டிற்கான சுழற்சி முறை மின் விநியோகம் நேற்று வழங்கப்படவில்லை.

சுன்னாகத்திலுள்ள ஜெனரேட்டர்களில் இரண்டு பழுதடைந்ததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் -

நேற்று மாலை திருத்த வேலைகள் முடிவுற்றதால் இன்று வழமைபோன்று மின்சாரம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

## கோயில் வீதியில் ஒருவர் காயம்

நேற்று மாலை 7 மணியளவில் யாழ் கோயில் வீதிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தில் பாஷையூரைச் சேர்ந்த அன்ரனி பிலிப் வயது 54 என்பவர் காயமடைந்தார். (உ-9)

## முச்சந்தி முரளி



இந்திய விளையாட்டுத்துறை உஷாச் இழக்குது எண்டு சொல்லுங்கோ......!

## கோப்பாயில் வேட்டுக்கள்

கோப்பாய்ப் பகுதியில் நேற்று நண்பகல் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. இதனால் இப் பகுதியில் பதற்றம் நிலவியது.

## வார இறுதி ரயில்சேவைகள்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 11

வடபகுதிக்கான வார இறுதி ரயில் சேவைகள் இவ்வாரம் சீராக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயணிகள் ரயில் ஒன்றும், சரக்கு ரயில் ஒன்றும் இன்று மாலை யாழ். வரும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

இவை நாளை இங்கிருந்து செல்லும்;

அதேவேளை நாளைமாலையில் பயணிகள்ரயில்ஒன்றும் சரக்கு ரயில் ஒன்றும் இங்கு வந்து, பின்னர் நாளை மறுதினம் இங்கிருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## மட்டுநகரில் தொண்டர் ஆசிரியரின்: உண்ணாவிரதப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 11

மட்டக்களப்பில் நடைபெற்று வந்த தொண்டர் ஆசிரியர்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப்போராட்டம் நேற்றுப் பகல் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அரசியல் இணைப்பாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி, வடக்கு-கிழக்கு மாகாணசபையின் பதில்முதலமைச்சர் திரு. எஸ். கிருபாகரனின் செய்தியை உண்ணாவிரதிகள் மத்தியில் வாசித்தார்.

தொண்டர் ஆசிரியர்களை

[8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைகளை வளர்த்தது நீங்கள்; பரிகாரம் காண நாங்கள் தேவையா?

### அரசிடம் சிறிமா கேள்வி

-கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர்-

கொழும்பு, ஆக 11

பிரச்சினைகளை நீங்களே வளர்த்துவிட்டு, இப்போது பரிகாரம் காண்பதற்குமாத்திரம் எங்களது ஆலோசனைகளைக் கோருகிறீர்களா?

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் அரசாங்கத்திடம் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

புதுடில்லிப் பேச்சுக்கள் வெளியுறவு அமைச்சர்ரஞ்சன் விஜேரத்தின சமர்ப்பித்த அறிக்கையின் மீதான விவாதத்தில் அவர் நேற்றுத் தொடர்ந்து பேசினார்.

அப்போது திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்தபோதும் —

இந்தியப்படையை இங்கு வரவழைத்தபோதும்—

இந்தியப்படையைத்திருப்பி அழைப்பதற்கு காலக்கெடு விதித்தபோதும்-எதிர்க் கட்சியினரின் ஆலோசனைகளை நீங்கள் கேட்டீர்களா?

தவறான இராஜதந்திரம்

நிலையற்ற வெளிநாட்டுக் கொள்கையும், தவறான இராஜதந்திர நடவடிக்கைகளும், பொருத்தமற்ற அணுகுமுறைகளுமே பிரச்சினைகளை வளர்க்கக் காரணமாகும்.

1977 இற்குப் பின்னர் பத

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் இடமாற்றங்கள் ஜனவரிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு ஆகஸ்ட் 11

சகல ஆசிரிய இடமாற்றங்களும் அடுத்த ஆண்டு வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது. (உ-எ)

### சுபநேரம்

[11 - 8 - 1989]

ஆடி 27 — வெள்ளிக்கிழமை நக்ஷத்திரம்: சித்திரை

சுபநேரம்:

6-04 முதல் 7-34 வரை

ராகுகாலம்:

10-34 முதல் 12-04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;

## அமைதிப்படைபிரச்சினைக்கு தீர்வுகண்டபின் வடக்கு கிழக்கில் சமாதானக் கமிட்டி!

### எல்லா தமிழ்க்குழுக்களுக்கும் அதில் இடம்

கொழும்பு, ஆக. 11

அமைதிப்படை விலகல் பிரச்சினைக்கு தீர்வு கண்டவுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சமாதானக் கமிட்டி ஒன்று நிறுவப்படும். அக் கமிட்டியில் அனைத்துத் தமிழ்க் குழுக்களும் இடம்பெறும். அந்தக் கமிட்டியின் தலைவராக தனது அமைச்சர்களில் ஒருவரை இலங்கை அரசு நியமிக்கும்.

இந்தக் கமிட்டியின் எந்த ஒரு தீர்மானமும் ஏகமனதாகவே எடுக்கப்பட வேண்டும்

— இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் தற்போது இடம்பெறும் வன்செயல்கள்பற்றி விசேட அறிக்கை ஒன்றையும் ஜனாதிபதி பிரேமதாஸா நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (இன்று) சமர்ப்பிப்பார்.

மாகாணசபைகளைப் பொறுத்தவரை அதிகாரப் பகிர்வு, வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல; சகல மாகாண சபைகளுடனும் அது சம்பந்தப்பட்டதே:

13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு அமைய அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்படும்.

மாகாணசபைகள் சுமுகமாக இயங்காதவரையில் அவற்றில் வளர்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள முடியாதிருக்கும்.

அபிவிருத்திக்கு அமைதி நிலவுவது அத்தியாவசியமானது;

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் வன்செயல்கள் காரணமாகத்தான் அங்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## திங்கள் பாடசாலைக்கு வர ஆசிரியர்களுக்கு பணிப்பு

கொழும்பு, ஆக. 11

சகல பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் வருகிற திங்கட்கிழமை கடமைக்கு திரும்பவேண்டும் என்று கல்வி அமைச்சர் நேற்று உத்தரவிட்டார்.

பாடசாலை நடவடிக்கைகளை மீண்டும் ஒழுங்கு செய்து, வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை திங்கள் முதல் மேற்கொள்ள வேண்டும் என்று அதிபர்களும் ஆசிரியர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்,

நேற்று கல்வி அமைச்சில் அமைச்சர் லொக்கு பண்டார தலைமையிலான மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவை தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (உ-எ)

## பொலீஸ் நிலையம் மீது அதிரடித்தாக்கு;2பொலீசார்பலி

கொழும்பு, ஆக. 11

பெந்தோட்டை பொலிஸ் நிலையம் மீது நேற்றுக்காலை அதிரடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஒரு மணி நேரமாக நடந்த இச்சம்பவத்தில் இரு பொலீஸார் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்த சில நவீன ஆயுதங்களைத் தீவிரவாதிகள் அபகரித்துச் சென்றனர் என்றும் கூறப்பட்டது. (ஓ-எ-21)

## ஆரம்ப ஆசிரியர் தெரிவு; தவறியோருக்கு வாய்ப்பு

கொழும்பு, ஆக. 11

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவுசெய்ய நடத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஆரம்ப ஆசிரியர்கள் தெரிவில் சித்தியடையாத சுமார் 10 ஆயிரம் பேருக்குச் சந்தர்ப்பமளிப்பது என்றும் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

கொழும்பில் நேற்று அமைச்சர் லொக்குபண்டார தலைமையிலான மாநாட்டில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது;

பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். (உ-எ)

## 'சார்க்' மாநாடு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஆகஸ்ட் 11

எதிர்வரும் செப்டெம்பரில் கொழும்பில் நடைபெறவிருந்த சார்க் தலைவர்களின் உச்சிமாநாடு அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இத

(8ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நஷனல் M 5 வீடியோக் கமராடெக் புத்தம் புதிய சூட்கேஸுடன் ரூபா 42,000/- நஷனல் 100 டெக் ரூபா 24,000/- தொ; தெய்வச்சந்திரன் தெனியம்பை வல்வெட்டித்துறை (1373)

G.C.E. (O/L) வணிகம் புதியபாடத் திட்டம் பகுதி 1 இதற்கான 300 வினாக்கள் இரண்டு மாதிரி வினாத்தாள் (விடைகளுடன்) ஆசிரியர் திரு. த. தயாளன் பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. [11796]

றஸ்ரன் டீசல் எஞ்ஜின் 45 குதிரை சக்தி காற்று குளிரூட்டல் (Air cool) நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. எஸ். சுப்பிரமணியம் அன்கம்பனி 34 ஆடிய பாதம் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம் (சி/3272)

**வீடு விற்பனைக்கு**

சுன்னாகம் பருத்திக் கலட்டியில் 4 பரப்பில் புதிதாக நிர்மாணித்து முடியும் தறுவாயிலுள்ள வீடு உரியவர்கள் வெளிநாடு செல்வதால் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஆயுள்வேத வைத்தியர் ஆ. நடராசா, சுன்னாகம் அல்லது க. இராமசாமி, 30, மாதங்கா வத்தை ஒழுங்கை, வெள்ளவத்தை. [1379]

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் Hybro புறொயிலர் குஞ்சுகள் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில் (1375)

**தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீட்டுடன் அல்லது வெறும் காணி வாடகைக்கு அல்லது வாங்குவதற்குத் தேவை. தொடர்பு: யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ஸ் (P.V.T.Ltd) முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (1359

**ஸ்கூட்டர் தேவை**

நல்ல நிலையில் உள்ள (வெஸ்பா லம்பிரட்டா பஜாஜ்) ஸ்கூட்டர் உடன் தேவை. ஸ்கூட்டருடன் நேரில் வரவும். தர்க்சா ஸ்ரேஷனேர்ஸ், பிரபல புத்தக சஞ்சிகை விற்பனையாளர்கள், பஸ் நிலையம் சுன்னாகம். (1378)

**CLASSES**

Basic Make-up and Hair Dressing Classes with Theory and Practical வகுப்புகள் 13-8-89 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாக இருக்கிறது. Virgo Beauty Parlour 71, Nayanmar Road. off Kachcheri Nallur Road, Nallur Jaffna. (11786)

**TYPEWRITER**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள். Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3264)

**சோதிட மாந்திரீக நிபுணர்**

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வை வாழ்க்கையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடம், மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். வியாழக்கிழமை விடுமுறை. (9348)

**தவறிவிட்டது**

பொன்னம்பலம் இரத்தினசிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும் பேர்சும் (091550253V) 5-8-89 அன்று யாழ் பஸ்நிலையத்தில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11799)


## வீட்டு நிவாரணம் கிடைக்கவில்லை

பச்சிலைப்பள்ளி ஆக 11

பளை, உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த வன்செயல்களின் போது வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகள் அமைப்பதற்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

ரூபா பதினையாயிரம் செலவில் வீடுகள் அமைக்கவென படிவங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட போதிலும் எதுவிதபலனும் கிடைக்கவில்லை.

அரசாங்கம் விட்டுத்தரும் என்பதால் தற்காலிக கொட்டில்களில் இருப்பதாகவும் நிரந்தர வீடுகள் அமைக்க முடியவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (க-117)

## கிராமந்தோறும் கருத்தரங்குகள்

காங்கேசன்துறை ஆக. 11

பலாலி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிராமந்தோறும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

பலாலி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அலுவலக பொறுப்பாளர் திரு. பொ. ரவி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்குகளில் கிராமிய மட்டத்தில் மக்களது தேவைகள் குறித்து ஆராயப்படுவதுடன், அவர்களது அபிப்பிராயங்களும் கோரப்படுகின்றன. (க-68)

# உயிரிழந்தோர் - படுகாயம் அடைந்தோருக்கு நிவாரணம் அளிக்க ரூ-60 லட்சம்

## 3000 விண்ணப்பப் படிவங்களில் 1000 மட்டுமே மீளக் கிடைத்தன

யாழ்ப்பாணம், ஆக 11

வட பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைளில் உயிரிழந்த அல்லது படுகாயமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென புனர்வாழ்வுத் துறை அமைச்சு 60 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதற்கான நிதியும் யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளது:

இதேவேளை சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரிப்பதற்கென மூவாயிரம் விண்ணப்பப் படிவங்களை யாழ். செயலகம் வழங்கியுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட ஆயிரம் விண்ணப்பங்களே தற்பொழுது செயலகத்துக்கு மீளக் கிடைத்துள்ளன.

இவற்றில் சரியான முறையில் பாதிக்கப்பட்டவர்கள் என உறுதிப்படுத்தப்பட்ட ஐந்து பேருக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் எழுதப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் அளவில் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படலாம் என யாழ். செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ- 10)

## ஸ்கந்தாக் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலம்

மானிப்பாய் ஆக 11

''சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வரலாற்றில் திரு. பொன் நாகரத்தினத்தின் காலம் ஒரு பொற்காலம் என்று கூறலாம்''

கடந்த 37 ஆண்டு காலமாக கல்வித்துறையில் சேவையாற்றி ஓய்வு பெறும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரும் சுன்னாகம் கொத்தணி அதிபருமான திரு. பொன் நாகரத்தினத்துக்கு ஆசிரிய மன்றம் அளித்த பிரியாவிடை மதியபோசன விருந்துபசார விழாவில் தலைமை வகித்து உரையாற்றியபோது மன்றத் தலைவர் திரு. க. புவனேந்திரநாதன் கூறினார்.

மருதனார்மடம் கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு: இ. க. குலசேகரம், ஆசிரியர்கள்: திரு. க. தனபாலசிங்கம், ஆசிரியை திருமதி வி இலட்சுமணன் ஆகியோர் திரு. பொன் நாகரத்தினத்தின் சேவையைப் பாராட்டி உரையாற்றினார்கள்.

இசை ஆசிரியர் திரு. எஸ் சிவானந்தராசா இன்னிசை விருந்தளித்தார்.

ஆசிரிய மன்ற செயலாளர் திரு ச யோகரட்ணம் நன்றியுரை கூறினார். [க-90]

## மட்டு. பாடசாலைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு ஆக 11

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகள் கடந்த 7 ஆம் திகதி 3ஆம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டன

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது (க-21)

## முறைசாராக் கல்வி நெறி மேலதிகப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஆக. 11

முறைசாராக்கல்விநெறியில் உடை தயாரித்தல், சுருக்கெழுத்து தட்டச்சு (தமிழ்) சுருக்கெழுத்து தட்டச்சு (ஆங்கிலம்) கற்கை நெறிகளைப் பயின்றவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்கப்படவுள்ளது

இப் பயிற்சி நெறியைப் பயின்றவர்களை 15 ஆம் திகதிக்கு முன்ன யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் மேற்கொண்டுள்ளார், (க-10)

## புதிய பொறுப்புகள்

மானிப்பாய், ஆக: 11

ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபரும் சுன்னாகம் கொத்தணி அதிபருமான திரு: பொன். நாகரத்தினம் இளைப்பாறியதைத் தொடர்ந்து சுன்னாகம் கொத்தணி உப அதிபரும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபருமான திரு. தற்பரானந்தம் சுன்னாகம் கொத்தணி அதிபரின் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்,

அதேபோல மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபரும் உடுவில் கொத்தணி அதிபருமான திருமதி எஸ். குமாரசாமி நீண்டநாள் லீவில் வெளிநாடு சென்றுள்ளகால் உடுவில் கொத்தணி அதிபர் கடமைகளை, கொத்தணி உப அதிபரும் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபருமான திரு: எஸ். சோதிப்பெருமான் பொறுப்பேற்றுள்ளார். (க- 90)

# புனர்வாழ்வுப் பணிகளை நாம் இயன்றளவு செய்து வருகிறோம்

## பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல்

திருகோணமலை, ஆக 11

கடந்த கால வன்செயல்களால் அழிந்துபோன தேசத்தை புனரமைப்பதில் பலவிதமான தடைகளுக்கு மத்தியிலும் அயராது செயற்பட்டு வருகிறோம் மத்திய அரசாங்கத்துடன் எத்தனையோ விதமான இழுபறிக்கு மத்தியில் பண ஒதுக்கீட்டைப் பெற்று வடக்கு - கிழக்கு மாவட்டங்களுக்கு ஒதுக்கிய போதிலும் மாவட்ட மட்டத்திலான நிர்வாக சிக்கல்கள் காரணமாக புனர்வாழ்வுப் பணிகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆனாலும் எம்மால் இயன்றதைச் செய்து வருகிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு, காணி விவசாய அமைச்சர் திரு. சி.எம். கணேசலிங்கம் தமது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கு ஒவ்வொரு துறைகளுக்கும் ஒதுக்கிய நிதி பற்றிய விரிவான பட்டியல் ஒன்றையும் அவர் வெளியிட்டார்.

இதன் பிரகாரம் திருகோணமலை மாவட்ட அத்தியாவசிய புனரமைப்புப் பணிகளுக்கென 7 கோடி 85 லட்சத்து 86 ஆயிரத்து 545 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது: இந்நிதியில் 4 கோடி 59 லட்சத்து 62 ஆயிரத்து 477 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீட்டிற்கு அமைய கல்விச் சேவைகளுக்கு 9,16, 101 ரூபாவும் பொதுப் பணி வேலைகளுக்கு 23 31,1413 ரூபாவும், உலர் உணவு வழங்க 279,94.564 ரூபாவும் குடியமர்வோர் படிக்கென 1,47 22 399 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது:

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 14 கோடி 55 லட்சத்து 79 ஆயிரத்து 495 ரூபா செலவிடப்பட்டுள்ளது: இதற்கமைய கல்விச் சேவைகளுக்கு 3,17,257 ரூபாவும், வீடமைப்பிற்கு 14,29,576 ரூபாவும், பொதுப்பணிகளுக்கு 55,50,000 ரூபாவும் குடியமர்வோர்படிக்கென 2,64 90 000 ரூபாவும் உலர் உணவு வகைகளுக்கு 1.67,92,655 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரை மொத்த செலவினம் 2 12,08,082 ரூபாவாகும். இதில் கல்விசேவைகளுக்கென 6,52,897 ரூபாவும், வீடமைப்பிற்கு 2,56,130 ரூபாவும், பொதுப்பணி வேலைகளுக்கு 44,055 ரூபாவும், குடியமர்வோர்படிக்கென 2,02,55,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் மேற் கூறிய மாவட்டங்களின் அத்தியாவசிய புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் இத்தகைய பணிகளை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் புனர்வாழ்வுப் பணிகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

வவுனியா

# விமானத்தளப் பகுதியில் தொடர்ச்சியான சத்தங்கள்

## ஹெலியில் இருந்தும் சூடு

வவுனியா. ஆக. 11

கடந்த செவ்வாயன்று இரவு 10 30 மணியளவில வவுனியா தச்சன்குளம் விமானத்தளப் படை முகாம் பகுதியில தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

பராலைட் வெளிச்சமும் போடப்பட்டது. அதுடன் ஹெலிக்கொப்டரில் இருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இலங்கை - இந்தியப்படைகள், இந்த விமான ஓடுபாதை பகுதிகளின் இருமருங்கிலும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இருபகுதியினருமே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவே தெரியவந்துள்ளது.

எனினும் எவருக்கும் காயமோ, சேதமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை (த-64)


**BITSMANS INSTITUTES**

Manipay

புதிய பிரிவு A/L 91

கலை, வர்த்தகம், விஞ்ஞானம்

ஆரம்பம்: 12 - 08 - 1989 சனி 8.00 a.m

**A/L 89/90 வகுப்புக்கள்**

வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன.

[1482]


## விவசாயிகளின் மகஜர்

கோப்பாய், ஆக 11

கோப்பாய் - கைதடி வெளியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கல்லு உடைக்கும் கிறேசர் கட்டிட நிர்மாணத்தை உடனடியாகத் தடுக்கும்படி கோப்பாய் விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

அம் மகஜரில், பலமுறை பத்திரிகை வாயிலாகவும், நேரடியாகவும் இவ்விடத்தில் கிறேசர் அமைக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகளை கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கும் உதவி அரசாங்க அதிபருக்கும் நினைவூட்டி வந்தோம். ஆனால் தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும்

இப்பகுதியில் கிறேசரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் நாம் விவசாய நடவடிக்கைகளை கைவிட நேரிடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது: (க-72)

## உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை நாம் வாங்கவேண்டும்

### வெளியீட்டுவிழாவில் உரை

யாழ்ப்பாணம். ஆக 11

''எமது மக்கள் உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை மனமுவந்து வாங்க வேண்டும். எமது இலக்கியம் வளர பொது மக்களும் தனியார் ஸ்தாபனங்களும் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்.''

இவ்வாறு யாழ்- அஸ்ரன் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற 'பேரன் கவிதைகள்' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய அஸ்ரன் கல்வி நிலைய நிர்வாகி திரு. ரி. லோகநாதன் கூறினார்.

முதற் பிரதியை பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம் பெற்றுக்கொண்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த அஞ்சல் திணைக்கள யாழ். பிரதேசக் கணக்காளர் திரு. எஸ். சிவபாலன் பேசுகையில், 'இலக்கியக்காரர்கள் வருவாய் கருதித் தமது நூலை வெளியிடுவதில்லை. தமது கருத்துக்களைப் பரப்பவே நூல்களை வெளியிடுகிறார்கள் பேரனின் புதுக்கவிதைகள் இன்றைய சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன; என்று கூறினார்.

திருமதி பத்மா சோமகாந்தன் பேசுகையில், 'பேரனது இலக்கிய முயற்சிகளுக்கு உறுதுணையாக அஞ்சல் திணைக்களம் இருப்பது பாராட்டிற்குரியது. பாரதியை அடிபொற்றியே தாம் கவிதை படைப்பதாகச் சொல்லும் இவரிடம் நல்ல கவிதை ஆற்றல் இருக்கிறது. சிறுகதை, நாவல்துறை மட்டுமல்லாது கவிதையும் தமக்கு வரும் என்று தம்மை இனம் காட்டிக் கொண்டுள்ளார் என்றார்.

புலவர் ம. பார்வதிநாதசிவம், கல்வயல் வே. குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினர்கள்.

நூலாசிரியர் தெல்லை க. பேரன் பதிலுரை நிகழ்த்தினார்.

ஆரம்பத்தில் செல்வி கே. ராகினி தவி தமிழ்த்தாய் வணக்கமும், அஞ்சல் திணைக்கள யாழ் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் திரு. அ. சிவரத்தினம் ஆசியுரையும் வழங்கினார்கள். அஞ்சல் திணைக்கள இலக்கிய நண்பர்கள் சார்பில் திரு. எஸ் ஆர். இராஜலிங்கம் நன்றி கூறினார். (த)

## கொள்கை விளக்கம்

ஈ. பி ஆர். எல். எவ் கட்சியின் கொள்கை விளக்கக் கூட்டமொன்று அண்மையில் சுருவில் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் இதில் பங்கு கொண்டு பல கேள்விகளைக் கேட்டு தமது சந்தேகங்களை நீக்கிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுளது.

மேற்படி கட்சியின் சார்பில் இரு பேச்சாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பொது மக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்கள்: (க 16)

## மூன்று பிள்ளைகளின் தாயார் தீ மூட்டித் தற்கொலை

முல்லைத்தீவு. ஆக. 11

மூன்று பிள்ளைகளின் தாய் உடம்பில் மண் எண்ணை ஊற்றித் தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார்;

இச்சம்பவம் முல்லைத்தீவு சிலாவத்தையில் நடந்தது.

சிலாவத்தை வாசியான மார்க்கோனி யோகவதி (வயது 23) என்பவரே இவ்வாறு பரிதாப மரணத்தை அடைந்தவர்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில வைத்து முன்னியவளை மரண விசாரணை அதிகாரி திரு. கி. தியாகராசா விசாரணை நடத்தினார்.

காலம் சென்றவரின் கணவரான அந்தோனிப்பிள்ளை- மார்க்கோனி (வயது 31) சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினார்;

சம்பவதினம் பிற்பகல் 2 00 மணியளவில் வீடு திரும்பிய போது மனைவி சமைக்கவில்லை என ஏசினேன்: ஏசியபின் நான் படுத்து நித்திரையாகி விட்டேன்.

சற்று நேரத்தில் கூக்குரல் கேட்டு எழுந்துபார்த்த போது மனைவியின் உடம்பு முழுவதும் தீப்பற்றி எரிவதைக் கண்டு தண்ணீர் ஊற்றினேன். பின்பு அவரை முல்லைத்திவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். அங்கு அவர் மரணமானார்.

இப்படி அவர் கூறினார்:

தற்கொலை எனத் தீர்ப்பளித்தார் மரண விசாரணை அதிகாரி; (இ-92)


**93ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



**செல்வன் கமலநாதன் தவநாதன்**

(Service Engineer Bartley's Ltd., Colombo)

மலர்வு: 04 — 09 — 1955

உதிர்வு: 10 — 05 — 1989

எனது அன்புத் தம்பியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் 90ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாது ஆத்ம சாந்திக்காக வேண்டுதல் செய்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பு அண்ணன்
க. நல்லநாதன்

இமையாணன் மேற்கு.
உடுப்பிட்டி.

[1501]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

பொருள்:
தகாத செயல் காரணமாக நாணுவதே நாணமாகும்; பெண்களுக்கு இயல்பான மற்ற நாணங்கள் வேறு வகையானது


உதயன்

இல. 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805 22073
11 - 08 - 1989
த. பெ: இல. 28


## நெருக்கடிகளும் யோசனைகளும்

நாட்டின் நெருக்கடி நிலையைத் தீர்க்க அவசர நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டாக வேண்டும் என்ற நிலை அவசியமாகிவிட்டது. அந்த அளவுக்கு, சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து மனித கொலைகள் உட்பட்ட வன்செயல்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

தமிழ்ப் பகுதிகளில் வருடக் கணக்காக வன்செயல்களும், வேண்டாத மரணங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இப்போது அந்த வேகம் சற்றுக் குறைந்திருக்கிறது என்று மட்டுமே சொல்லலாம். படுகொலைகள் நடக்காத நாளில்லை என்று தினமும் மரணங்கள் சம்பவித்த வண்ணமே இருக்கின்றன என்பதே உண்மை நிலை.

எனினும் தெற்கில் வன்செயல்கள் வீச்சமடைந்துள்ளன. தினமும் சராசரி 30, 40 பேர் படுகொலை செய்யப்படுகின்றனர். படையினர் —தீவிரவாதிகள் மோதல்கள் நடக்கின்றன. தேடுதல்கள் சுற்றி வளைப்புகள் அங்கும் ஆரம்பமாகியுள்ளன. சந்தேகத்தின் பேரில் கைது. வீதிகளில் சடலங்கள் என்று வடக்கில் நடந்த, நடக்கின்ற அதே பாணியில் அங்கும் பதற்ற நிலை உருவாகி உள்ளது.

அந்தப் பதற்றம் அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கத் தொடங்கி விட்டது. ஒரு காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் மிகப்பெரிய அளவில் நடந்தபோதிலும் தெற்கில் உணரப்படாமல் இருந்த மக்களின் பதற்றமும், பாதுகாப்பு இல்லாத நிலையும். தெற்கில் இப்போது உருவாகியதும் பெரிதாகவே உடனடியாக உணரப்படுகிறது!

அதன் காரணமாக, பதற்றத்துக்கும் அதன் பெறுபேறான நெருக்கடிக்கும் ஏதாவது செய்யப்பட்டாக வேண்டும், அவற்றைத் தணிக்க வேண்டும் என்ற அவசியமும் பெரிதாக உணரப்படுகிறது. தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பது எவ்வளவு அர்த்தமுள்ளது பார்த்தீர்களா?

நெருக்கடியின் தாக்கத்தை உணர்ந்து அதனை நீக்குவதற்கு, தென்பகுதி அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழி கூறி வருகின்றனர். தேசிய அரசு அமைக்க வேண்டும் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன. வன்செயல்களை நிறுத்துமாறு சகல கட்சிகளும் கூட்டாகப் பகிரங்க வேண்டுகோள் விடலாம் என்கிறார் இப்போதைய ஜனாதிபதி. எதிர்க்கட்சித் தலைவியும், முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றத் தெரிவுக் குழு யோசனையை கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்.

நாட்டில் நெருக்கடி தோன்றும் பொதெல்லாம் இவ்வாறான யோசனைகள் தெரிவிக்கப்படுவது வழக்கம். அதே விதமாக இம்முறையும் இந்த யோசனைகள் வந்துள்ளன. இதில் எதனை அரசு கைக்கொள்ளப் போகிறது என்பது ஒரு புறம். மூன்றில் ஏதாவது ஒன்றின் மூலமேனும் நெருக்கடியைத் தவிர்க்க முடியுமா, அதற்கு ஆக்கபூர்வமாக உதவுமா என்பது மறுபுறத்தில் முக்கியமான கேள்வி.

வன்செயல்களை முன்னின்று நடத்தும் தீவிரவாத சக்தியை வழிப்படுத்தி, அதற்குள்ள குறைகளை அறிந்து, அதன் விடாப்பிடியைத் தளர்த்த ஊக்கப்படுத்தி, அதனையும் பிரதான நீரோட்டத்திற்குத் திசை திருப்ப முயற்சிக்காமல், மூன்று என்ன முப்பது திட்டங்கள், யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் எதிர்பார்க்கும் எண்ணம் நிறைவேற முடியாது.

வன்செயல்களுக்குப் பின்னணியில் நிற்கும் சக்தியை சரிவர இனம் கண்டு, அதனுடன் எப்பாடுபட்டும் தொடர்பு கொண்டு, இசைவு நிலையை உண்டாக்காமல் தெற்கின் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது கஷ்டம். முற்றிலும் இளைஞர் சக்தியைக் கொண்டியங்கும் அந்தத் தரப்பை தனிமைப்படுத்தி விட்டு விட்டு நெருக்கடியைத் தணிக்கலாம் என நினைப்பது முடவன் மலைத்தேனுக்கு ஆசைப்பட்டது போன்றதாகும்.

பல ஆண்டுகால அரசியல் வாழ்க்கையின் பின்னரும், மூத்த அரசியல்வாதிகள் மூவரும் இதனை மறந்து காகிதத்தில் கப்பல் செய்து கடலில் பயணம் செய்ய எண்ணுவது ஏனோ தெரியவில்லை; புரியவில்லை.

## நால்வர் சுட்டுக்கொலை குமிழமுனை, நெடுங்கேணியில்

வவுனியா ஆக 11

கடந்த திங்களன்று குமுழமுனை பகுதியிலும் நெடுங்கேணியிலும் இடம் பெற்ற இருவேறு சம்பவங்களில் நாலு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று வவுனியாவுக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

குமுழமுனையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் ஒரு ஏ. கே. 47 ஒரு எஸ். எல். ஆர் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணியில் சுரேஷ் என்பவரே இறந்ததாகக் கூறப்பட்டது. (த-164)

### செய்தியாளர் கைது

வவுனியா, ஆக. 11

மடுக்கந்தை பகுதியை சுற்றி வளைத்த இலங்கை இராணுவத்தினர் கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகையின் செய்தியாளர் ஒருவரைக் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

திவியின பத்திரிகையின் வவுனியா செய்தியாளரான திரு. தினசேன கமகே என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (த-164)

# தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம்; புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

## வேலைகள் பூர்த்தியானதும் பண்ணைக்கு திணைக்களம் மாறும்

யாழ்ப்பாணம், ஆக. 11

பண்ணையில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்ணையில் அமைந்த இந் நிலையம் கடந்த கால சம்பவங்களின் போது பலத்த சேதமடைந்ததை அடுத்து, தொலைதொடர்பு திணைக்களம் சிறும்பியடிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

தற்சமயம் இந்நிலையத்தின் ஒருபகுதி வேலைகள் முடிவடைந்து விட்டன. மற்றைய பகுதிகள் வேலைகளை ஆரம்பிக்க மதிப்பீடு செய்யும்படி யாழ் அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ் வேலைகள் முடிவடைந்ததும் தொலைத் தொடர்பு திணைக்களம் பண்ணைக்கு மாற்றப்படும் என தொலைத் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் 4 ஆம் உணவு முத்திரைக்கு பொருள் வழங்க முடியாத நிலைமை

பருத்தித்துறை, ஆக 11

பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உணவு முத்திரையின் 4 ஆம் புள்ளிக்குரிய பாவனைப் பொருள்களை வழங்க முடியாத நிலையிலுள்ளது.

இதுவரை 1—3 புள்ளிகளுக்காக 47 இலட்சம் ரூபாவையும் வங்கி மேலதிகப்பற்றாக 15 இலட்சம் ரூபாவையும் செலவழித்ததுக்குரிய காசோலை உணவுத் திணைக்களத்தினால் வழங்கப்படவில்லை.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் நீண்டகால லீவில் நிற்பதால் இதனை வழங்க சிபார்சு செய்யப்படவில்லை.

இதனால் உணவு முத்திரையின் 4 ஆம் புள்ளிக்கான உணவுப் பொருள்களை வழங்க நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக பருத்தித்துறைப் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சதாசிவம் கந்ததாசன் தெரிவித்துள்ளார். (இ-118)

### நன்னீர்க் கேணி ஆழமாக்கப்படுகிறது

கோப்பாய் வடக்கு பகுதியில் கால்நடைகள் நீர் அருந்தும் நன்னீர்க் கேணி தற்போது ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

இதனால் கோப்பாய்-கைதடி வெளியில் மந்தை மேய்ப்போர் பெரிதும் நன்மை அடைய உள்ளனர் (உ-72)

### ஆய்வரங்கு

சாவகச்சேரி, ஆக 11

புதிய சமுதாய வெளியீட்டகத்தின் அனுசரணையுடன் முன்னோடிகள் நடத்தும் அறவழி ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை மாலை கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது

டாக்டர் கே ரி எஸ் சபாநாதன் தலைமையில் இடம் பெறும் இவ்வாய்வரங்கில் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திரு எஸ் வடிவேலு, முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு கே சண்முகலிங்கம், ஆசிரியர்கள் ப செல்வத்துரை, க சத்தியநாதன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர் (உ-31)

### பரீட்சை

மட்டக்களப்பு, ஆக 11

எழுதுவினைஞர் சேவை II'ஆ' போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்டம்பர் 16 ஆம் திகதி நடைபெறும்.

இப் பரீட்சை கடந்த 5 ஆம் திகதி நடைபெறவிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-21)

## முஸ்லிம் காங்கிரஸ் மறுப்பு

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்திய அரசுடன் பண விவகாரத் தொடர்புகள் எதுவும் வைத்துக் கொள்ளவில்லை.''

கட்சிச் செயலாளர் அல் - ஹாஜ் எம். ஜே. ஏ. சாஹிட் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் செயலாளர் அல்-ஹாஜ் எம். எஸ். ஓஸ்மான் தெரிவித்த குற்றச் சாட்டுக்கு பதில் அளித்து அவர் இப்படி தெரிவித்துள்ளார். (க-21)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## நல்லூர் நாதனே, குகனே!

இராகம்:- ஆரபி தாளம்:- ரூபகம்

பல்லவி

குருநாதனே குகனே நல்லூர் நாதனே
குகனே — [குருநாதனே]

அனுபல்லவி

அருள் புரிவாய் உன்னை நம்பினேன் ஐயா
அருள் புரியாயெனில் அந்தோ [ஆறெனக்குத்துணை
கருணைக் கடலே கால கண்டன் சேயே
— [குருநாதனே]

சரணம்

சேயே யானுனை நம்பினேன் ஜெகநாதனே
தாயே யல்லயோ நீ தந்தையு மல்லயோ அப்பா
மாயா இருளகற்றி மாட்சி தாராது நான்
பேயாய்த் திரிந்தால் பெருமையோ உனக்கு?
[குருநாதனே]

— நா. கனகரத்தினம்

(இன்று நல்லூர்க்கந்தன் ஆறும் திருவிழா)

## பயிலுநர் ஆசிரியர் பரீட்சை: விடைத்தாள் புள்ளியிடும் பரீட்சகர்கள் தெரிவு

மானிப்பாய், ஆக. 11

மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் சிங்கள தமிழ் மொழி மூல 25 ஆயிரம் உதவி ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சை விடைத்தாள்கள் புள்ளியிடும் பரீட்சகர்களை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் தெரிவு செய்து அவர்களுக்கான கடிதங்களை வழங்கியுள்ளது.

இம்மாதம் 15 ஆம்திகதிநடைபெறும் இப்பரீட்சைக்கான புள்ளியிடும் வேலைகள் 16ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த பதின்நான்கு உதவி அதிபர்கள் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பன்னிரண்டு பாடசாலைகளில் பரீட்சை நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துமகளிர்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி, மருதனமடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, வேலணைசேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை வடஇந்து ம. வி. கரணவாய் பொன்னம்பலம் ம.வி. வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உடுத்துறைமகாவித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பரீட்சை நடைபெறும் (க- 90)

### மின்சாரப் பிரச்சினை

கோப்பாய், ஆக. 11

கோப்பாய்ப் பகுதியில் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படும்போது தோட்டங்களுக்கு நீர் இறைப்பதற்கு சட்டவிரோதமாக மின்சாரத்தைப்பெறுவதால் வீட்டு மின்மோட்டர்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க-72)

## மார்பு நோய் வைத்தியசாலையின் குறைபாடுகளைத் தீர்க்க முயற்சி

காங்கேசன்துறை, ஆக. 11

காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த வடக்கு கிழக்கு மாகாணசபை யாழ் மாவட்ட உறுப்பினர்கள் திரு. கே. ரவீந்திரன் திரு. பி. பிரபாகரன் ஆகியோர் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது பற்றி ஆராய்ந்தனர்.

வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை நோயாளர்களுக்கு தரமான உணவு கிடைக்க ஆவன செய்வதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய ஏற்பாடுகளை மேற்கொள்வதெனவும் அதற்கு வைத்தியசாலை சுற்றாடலிலுள்ள பொது ஸ்தாபனங்கள், பொது மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். (க-68)

## தமிழருக்கு தனிச் சிங்களக் கடிதங்கள்; அமைச்சர் செல்லச்சாமி புகார்

கொழும்பு, ஆக. 11

''தமிழ் மொழி அமுலாக்கலை தாமதப்படுத்துவது ஜனாதிபதியின் பணிப்புரைகளை உதாசீனப்படுத்துவதாகஅமைகிறது.''

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திரு. எம் எஸ். செல்லச்சாமி பொது நிர்வாக அமைச்சர் திரு. யூ.பி. விஜயக்கோனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மொழி தேசியமொழி அந்தஸ்து பெற்றும் இதுவரை அமுல் செய்யப்படவில்லை. இதற்கு பொறுப்பு தங்கள் அமைச்சுதான்.

இதனால் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமிழர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் தான் வருகின்றன.

தமிழ் மொழியை உடன் அமுல் செய்யுங்கள். தமிழ் கடிதங்களுக்கு அம்மொழியில் பதில் அனுப்புங்கள் என அவர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார். (க-21)

### சமய சிந்தனையில்

### கோப்பாய் வடக்கு செல்வ விநாயகர் உற்சவம்

கோப்பாய் ஆக. 11

கோப்பாய் வடக்கு செல்வ விநாயகர் கோயிலில் வருடாந்த கும்பாபிஷேக தினத்தின் இறுதிநாள் உற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விஷேட அபிடேக ஆராதனைகளும் இடம் பெறவுள்ளன. (க-72)

### இளாலி கழிக்கரை நாச்சிமார் ஆலய பொங்கல் உற்சவம்

இளாலி கழிக்கரை நாச்சிமார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் ஆகஸ்ட் பதின் மூன்றும் திகதி ஞாயிறு காலை நடைபெறவுள்ளது.

### கப்பலேந்தி மாதா தேவாலய உற்சவம்

தாளையடி கட்டைக்காடு கப்பலேந்தி மாதா தேவாலய வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமானது

ஆகஸ்ட் பதின்மூன்றும் திகதி சிறுவருக்கான முதல் நன்மை ஆராதனையும் பதின் நான்காம் திகதி மாலை சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும் பதினைந்தாம் திகதி காலை திருப் பலிப் பூசையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளன.

தாளையடி பங்குத் தந்தை அருட்திரு மரியசெபஸ்ரியன் அடிகளார் நவநாள் ஆராதனை நடத்திவருகிறார். (க-117)

### வாசகர் திருமுகம்

### அரசினர் வைத்தியசாலை

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை சுமார் 12 கிராமங்களின் மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலை ஆகும்.

இவ் வைத்தியசாலையில் இரண்டு வைத்திய அதிகாரிகள் சேவையாற்றினார்கள். அவர்களில் ஒருவரான டாக்டர் செல்வராசா கொட்டைக்காட்டு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு 3 மாதங்களாகியும் அவருடைய இடத்துக்கு இன்னொருவர் நியமிக்கப்படவில்லை

மற்ற வைத்தியருக்கு புதன்கிழமை காலையில் கிளினிக். கிளினிக் நேரத்தில் அவருக்கு வெளிநோயாளரைக் கவனிக்க நேரம் இல்லை. பிற்பகலில் அவர் இளவாலைக்குச் செல்வதால் புதன்கிழமைகளில் செல்லும் நோயாளர்கள் கவனிக்கப்படாமல் திரும்புகின்றார்கள்.

மாதத்தில் இரு செவ்வாய்க்கிழமைகளிலும் இதே நிலைமை காலையில் சிறுவர் கிளினிக் பிற்பகலில் வசந்தபுரம் செல்கிறார் டாக்டர் இதே நிலை தான் சனிக்கிழமைகளிலும்.

மாற்றலாகிச் சென்ற டாக்டரின் இடத்துக்கு இன்னொருவரை விரைவில் நியமித்து இந்தக் கஷ்டத்தை நீக்குவார்களா?

ஏ. கே. சாமி.
பண்டத்தரிப்பு

### கோப்பாயில் யாரும் இல்லையா?

அண்மையில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் யூ.என். எச் சி ஆரின் களஞ்சியம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இதில் கடமையாற்ற கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஒருவர் காவலாளியாகவும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஒருவர் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குறிப்பாக கோப்பாயில் களஞ்சியப் பொறுப்பாளராக நியமிக்கும் தகுதி உடையவர்கள் யாரும் இல்லையா?

க. விக்னா.

### மரணம் மர்மம்

நாரந்தனையில் அண்மையில் திருமணமாகாத பிறப்பு ஊமையான 40 வயது இளம் பெண் ஒருவர் மர்மமான முறையில் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பெண் வெளியே சென்று வீடு திரும்பிய பின்னர் சற்று நேரத்தில் மயக்கமடைந்து மரணமானதாகவும் இவரது மரணத்தில் உறவினர்கள் சந்தேகம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## கண்டதும் கேட்டதும்

சமீபத்தில் சாவகச்சேரியில் குடும்பப் பெண் ஒருவருக்கு தெரு நாய் ஒன்று கடித்துவிட்டது.

அதன் பின்னர், அதே நாய் தெருவால் சென்ற மேலும் மூன்று இளம் பெண்களைக் கடித்து விட்டு இறந்து போனது பின்பு தெரியவந்தது.

நாயினால் கடியுண்ட பெண் யாழ். பெரியாஸ்திரிக்கு கொண்டு வரப்பட்டார். அங்கு விசர் நாய்க் கடிக்குப் போதுமான ஊசி மருந்து இல்லை.

பெரியாஸ்பத்திரியின் பெருங்கோலம் இது என்றால் கிராமப் பகுதிகளில் உள்ள குட்டி ஆஸ்பத்திரிகள் குறித்துச் சொல்ல வேண்டுமா?

குடாநாட்டின் எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இதே நிலைமை தான்.

அது இருக்கட்டும் விஷயத்துக்கு வருவோம். சம்பந்தப்பட்ட பெண்ணுக்குப் பெரிய கஷ்டத்தின் மத்தியில் ஓர் ஊசி போடப்பட்டது.

மிகுதி ஊசிகளுக்குத் தேவையான மருந்தைப் பெறுவதற்காக பெண்ணின் உறவினரே ஆஸ்பத்திரிப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதத்துடன் தம் சொந்தச் செலவில் கொழும்பு விரைய வேண்டியதாயிற்று.

தொடர்ச்சியாக ஊசி போட வேண்டிய பெண் ஒரு ஊசியுடன் காவல் காக்க வேண்டியதாயிற்று.

இந்த நிலை இன்னும் எத்தனை பேருக்கு ஏற்படுமோ?

— செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COMPUTER COURSES

Diploma in Basic Programming

**புதிய பிரிவுகள் 12-8-89 ஆரம்பம்**

MODULE - I — 8. 30 A. m
MODULE - II — 10. 00 A, m

சேரும்போது செலுத்த வேண்டியது: Rs 500/-

★ ஏற்கனவே ஒதுக்கி வைக்கப்பட்ட பிரிவிற்குரிய மாணவர்கள் அனைவரும் தத்தமக்குரிய பிரிவுகளில் உடனடியாகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ மல்லாகம் கிளையில் 11-8-89, 4 30 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகும். ஏற்கனவே படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மல்லாகம் IDP காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**IDP COMPUTER CENTRE**
342, K. K. S Road, JAFFNA.
(C/3168)


## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
09 - 09 - 1933

மறைவு:
17 - 07 - 1986

திதி: 11 - 08 - 1989

### திருமதி யோகம்மா சுப்பிரமணியம்

[முன்னாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை]

அன்பே உருவாகி, அருயிர்த் துணைவியாகி அருமைத் தாயாகி, குடும்பத்தில் குலவிளக்காகி அன்புடனும் பண்புடனும் வளர்த்து, கல்வியூட்டி எம்மை எல்லாம் உயர்நிலைக்கு ஆளாக்கிய உத்தமியே ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு விண்ணுலகெய்தி மூன்றாண்டுகள் சென்று விட்டன மூன்று ஆண்டுகளல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டகலாது.

உங்கள் நினைவுடன்

தாய், கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

'யோகபவனம்'
மருதடி, சாவகச்சேரி.
(1463)

## ஓராண்டு நினைவஞ்சலி



### தர்மலிங்கம்-ஜெயதாஸ் (ஜெகன்)

மலர்வு: 26-12-1960
உதிர்வு: 11-08-1988

உன்
வீரத்தின் விதைப்புக்கள்
வரலாற்றில்
வளர்ச்சியின் விழிம்புகள்

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
வட-அல்வை.
(1462)

யாழ் உதவி அரச அதிபர் பிரிவு:

# நிரப்பப்படாத நிலையிலே கிராமசேவையாளர் வெற்றிடம்

### எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டும் பயன் இல்லை

யாழ்ப்பாணம், ஆக 11

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 10 கிராமசேவையாளர் வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை என்று தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவில் இதுவரை இருந்து வந்த பதினொரு கிராம சேவையாளர் பிரிவுகளும், தற்போது இருபத்தைந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏற்பட்டுள்ள பதினான்கு கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்கும் இதுவரை நான்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களே கிராம சேவையாளராக இடமாற்றப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் மேலும் உள்ள 10 கிராமசேவையாளர் வெற்றிடங்களும் இதுவரை நிரப்பப்படாது தொடர்ந்து காலியாகவே உள்ளன. (க-13)

# மாறிவரும் கல்வித் தேவைக்கேற்ப பாடத்துறையிலும் அறிவு பெருகவேண்டும்

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

பருத்தித்துறை ஆக 11

"மாறிவரும் விஞ்ஞான உலகின் கண்டுபிடிப்புகளுக்கும் வேகமாக மாறிவரும் உலகின் கல்வித் தேவைகளுக்கும் அமைய ஆசிரியர்கள் பாடத்துறையிலுள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்"— யாழ். கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் தொலைக்கல்வி பயிற்சி நெறியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

வைபவம் யாழ் கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரியும் தொலைக்கல்விப் பணிப்பாளருமான ஜனாப் இநாமு தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து பேசியதாவது:

இன்று சுமார் 45 ஆயிரம் ஆசிரியர்கள் பயிற்சி பெறாது இருக்கின்றார்கள். இவர்களுக்கு விரைவில் பயிற்சி வழங்க வேண்டியது கல்வித்திணைக்களத்தின் கடமை.

தொலைக்கல்விச் சான்றிதழ் எந்தவகையிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழுக்குக் குறைந்தல்ல

மேலும் ஆசிரிய கலாசாலை சென்று கற்க முடியாத தாய்மார்களும் ஏனைய வசதிகுறைந்தவர்களும் இலகுவில் இக்கற்கை நெறியைக் கற்கக் கூடிய விதத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பாடவிதானம் தயாரிக்கப்பட்டு பாடவிதானங்கள் யாவும் நூல்வடிவில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

இப்படிக் கூறினார்.

வைபவத்தில் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு புலேந்திரன் பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன் திரு.எம். எஸ். அலேக்ஸ்சாந்தர் ஆகியோர் உட்பட பலர் சிறப்புரையாற்றினர்கள்.
(இ-118)


## SCIENCE CENTRE
### KARAVEDDY

A/L, O/L வகுப்புக்கள்
விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அண்மையில் நடைபெறுகிறது.
வெள்ளி 9—10 இரசாயனம்
திங்கள், புதன், வெள்ளி 8—9 கணிதம் (நல்லையா)
(1476)

## MODERN EDUCATION CENTRE
### KARAVEDDY

சனி 12 - 8 - 1989 காலை
ஆண்டு 10 - 8 - 9 கணிதம்
11 — 9 — 10 கணிதம்

A/L 91 'C' புதியபிரிவு ஆரம்பமாகிறது
(1477)

## BECON
யாழ்ப்பாணம்

## A/L 91

புதிய பிரிவு

ஆரம்பம்:
12-8-89 சனி 8·00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | ஜோதீஸ்வரன் |
| அரசியல் | — | சுந்தரமூர்த்தி |
| புவியியல் | — | இக்னேசியஸ் |

(சி / 3251)

மலிவு விலையில் அறிமுகம்!
CHILTON TRIP SWITCH
மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

## சுந்தர்சன்
சந்தை முன்,
மானிப்பாய்.


### வைரமுத்து நினைவாக கலந்துரையாடல்

மானிப்பாய், ஆக 11

காலஞ்சென்ற நடிகமணி திரு வி வி வைரமுத்துவின் நினைவுக் கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு டெல்லி பலை கலை இலக்கியக் கழகத்தின் ஆதரவில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற உள்ளது

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் குழந்தை சண்முகலிங்கம், காரை செ சுந்தரம்பிள்ளை, கலைப்பேரரசு திரு ஏ ரி பொன்னுத்துரை, திருமதி கோகிலா மகேந்திரன், திரு பி ஏ சி ஆனந்தராசா, திரு வி ரி செல்வராசா, சைவப்புலவர் திரு சு செல்வத்துரை, திரு அனு வை நாகராசன் ஆகியோர் கலந்துகொள்ளுகின்றனர். (உ- 0)

### புனருத்தாரண வேலை

யாழ்ப்பாணம், ஆக. 11

பருத்தித்துறை உதிராவத்தையில் அமைந்துள்ள ஞான வைரவர் கோயில் புனருத்தாரணவேலைகள் மிகத் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலய ஸ்தாபகர்களில் ஒருவரான திருமதி செல்லம்மா நமசிவாயம் புனருத்தாரணவேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்.

மிகவிரைவில் இக்கோவிலின் கும்பாபிஷேகம் கொண்டாடப்பட உள்ளது என அறியவருகின்றது. (க-13)


## பயிலுநர் தேவை

★ கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டால் அது எப்போதும் கை கொடுக்கும்.

★ அச்சுக் கோர்த்தல் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழிலைப் பயில்வதற்கு விரும்புகிறீர்களா?

★ ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழில் திறமைச் சித்தியுடன் தேர்ச்சி அடைந்த 18 முதல் 30 வயதான ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ பயிற்சிக் காலத்தில் அலவன்ஸ் வழங்கப்படும்:

★ உறவினர்கள் அல்லாத இருவரிடம் இருந்து பெற்ற நற்சான்றிதழ்களுடன் நேரில்வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
**அருண் அச்சகம்**
15, இரண்டாவது ஒழுங்கை.
மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
(சி/32 08)


## 6ஆம் மாத நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
13.02.1971

ஆண்டவன் அழைப்பு:
08.02.1989

திதி: 11-08-1989

### செல்வன் தியாகராஜா மணிவண்ணன்

ஆறுமாத காலம் மறைந்திடினும், ஆதவன் ஒளி பரப்ப மறந்திடினும் எம் உயிர் உள்ளவரை உமது அன்பின் திருவுருவம் எங்கள் உள்ளத்தை விட்டு என்றும் அகலாது.

11-08-89 அன்று நடைபெறும் வீட்டுக்கிரியையில் கலந்துகொண்டு அவர்தம் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்புப் பெற்றோர்,
சகோதரிகள், அத்தான்,
உற்றார், உறவினர்கள்

பிறவுண் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(11713)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



### மாணிக்கம் சந்திரகுமார் B.S.C

அன்னையின் மடியில்
1960—10—02

ஆண்டவன் மடியில்
1988—08—11

எம் குலத்தின் விலை மதிக்க முடியாத மாணிக்கமே
எங்கள் அன்பின் செல்வமே
அன்பின் ஒளி விளக்கே
பாசத்தின் பிறப்பிடமே
அழகின் ஒளிப்பிழம்பே
நோர்வே நாட்டின் பல்கலைக்கழகத்தில்
அறிவின் கடலாய் முதலிடம் வகித்தவனே

உமது நினைவால் வாடும் அன்னை சகோதரர்கள் மச்சான்மார், அண்ணிமார், மருமக்கள், பெருமக்கள், உற்றார், உறவினர்கள் யாபேரும் உமது ஆத்ம சாந்திக்காக வேண்டுதல் செய்கிறோம்.

திருமதி மாணிக்கம்
மா. சிவசுப்பிரமணியம் குடும்பம்
மா. விக்னேஸ்வரராஜா குடும்பம்
M. விஜேந்திரா குடும்பம்
46, West Bury Road
Wembley
Middlesex, HA 04 JY

ஜெயகுமார் குடும்பம்
உலகநாதன் குடும்பம்
Sorstein II
6400, Molde
Norway.

(சி/3195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு மொழியாக ஆங்கிலத்தை பயன்படுத்துக!

## முன்னாள் ஜனாதிபதியின் அறிவுரை

கொழும்பு, ஆகஸ்ட் 11

சிங்களவர்களும், இலங்கைத் தமிழர்களும், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் தேசங்களுக்கு இடையேயான சகல அலுவல்களுக்கும் ஆங்கிலத்தை உபயோகித்து அதனை ஓர் இணைப்பு மொழியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

— நேற்று முன்தினம் கொழும்பில் புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன இப்படிக் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

உலகில் நூறு கோடி மக்கள் ஆங்கிலத்தைப் பேசி வருகிறார்கள்.

இந்த பிரபஞ்சத்தில் ஆங்கிலமே முதல் மொழியாகத் திகழ்கிறது.

ஆங்கிலத்தின் விஞ்ஞான வளர்ச்சி, பல்தேச பொருளாதார வளர்ச்சி, சர்வதேச அரசியல் தொடர்புகளுக்கும் உதவுகிறது.

இப்படி திரு. ஜெயவர்த்தன சொன்னார். அமைச்சர் காமினி திஸநாயக்காவும் இவ்விழாவில் பேசினார். (உ-எ)

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.
A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
91 பிரிவு 2, ஆரம்பமாகிவிட்டன
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:
பொருளியல்:- திரு. கலாகரன்
வர்த்தகம்:- திரு. லங்கா
கணக்கியல்:- திரு. வன்னிய சிங்கம்
அளவையியல்:- திரு. சுப்பிரமணியம்
இந்து நாகரிகம்:- திரு. காரைசுந்தரம்பிள்ளை
தமிழ்:- திரு. குழந்தை
புவியியல்:- திரு. குணராஜா
அரசியல்: திரு. மஃறூப்
● முக்கிய குறிப்பு:- கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து கற்பிக்கும் ஒரே நிறுவனம்.
[சி-3°61]

இரு வருடக் கடன்:

# தொழில் திணைக்கள ஊழியர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 11

இரு வருடக் கடன் வழங்கும் திட்டத்தில் யாழ் மாவட்ட தொழில் திணைக்கள ஊழியர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரு வருட கடன் வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் யாழ் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த 42 ஊழியர்கள் கடன்பெற விண்ணப்பித்தனர்.

இவர்களது விண்ணப்பங்கள் கொழும்பு தலைமையகத்துக்கு சமர்பிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இதுவரை எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று புகார் கூறப்படுகிறது.

இதே நேரம் யாழ். தொழில் திணைக்களத்தை சேர்ந்த மூன்று ஊழியர் தம் பாதிப்பை கொழும்பு சென்று உறுதி செய்து கடன் பெற்றுள்ளனர்.

மீதியான ஊழியர்களுக்கு கடன் வழங்குவது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையையும் தொழில் திணைக்களத் தலைமையகம் எடுக்கவில்லை. (த-3)

# பாடசாலை அபிவிருத்தி சங்க சம்மேளனங்கள்

## முதலில் கொத்தணி மட்டத்தில்

பண்டத்தரிப்பு, ஆக.11

பாடசாலைகளில் கல்வி வசதிகளை அதிகரிக்கச் செய்யவும், மாணவரின் கல்விமேம்பாட்டுக்கு உதவவும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் தேவைகளை தேடிக்கொடுக்கவும் பாடசாலை அபிவிருத்திச்சங்க சம்மேளனங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இவை முதலில் கொத்தணி மட்டத்திலும், அடுத்து கோட்டக்கல்வி அலுவலக மட்டத்திலும், பின்னர் மாவட்ட மட்டத்திலும் அமைக்கப்பட உள்ளன. (ச-12)

### மீன் தட்டுப்பாடு

சாவகச்சேரி, ஆக 11

சாவகச்சேரி மீன் சந்தையில் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் ஒரு கிலோமீன் 50 ரூபாவில் இருந்து 80 ரூபாவரை விலைபோகிறது.

கருவாடும் சற்று அதிகமான விலைக்கே விற்கப்படுகிறது, [உ-31)

செவன மானியத் திட்டம்:

# மாத இறுதிக்குள் வீடுகளை பூர்த்தி செய்யுமாறு பணிப்பு

## யாழ்ப்பாணத்தில் 268 வீடுகளே இதுவரை பூர்த்தி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 11

செவன மானியத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்கள் தம் வீடுகளை இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று வீடமைப்பு அதிகாரசபை கேட்டுள்ளது.

செவன மானியத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 1028 வீடுகள் அமைக்க குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களில் 268 பேரே வீடுகளைப் பூர்த்தி செய்துள்ளனர். மீதியானவர்களும் இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்து ஒதுக்கப்பட்ட முழு மானியத்தையும் பெறும்படி அதிகாரசபை ஆலோசனை கூறியுள்ளது.

இது சம்பந்தமாக பிரதேச சபை ஆணையாளர்களுக்கு அதிகார சபை சுற்று நிருபம் அனுப்பியுள்ளது.

### கிராமிய வீடமைப்புக்கு ரூ. 30 லட்சம்

இதேவேளை கடந்த ஏழு மாதங்களாக யாழ் மாவட்டத்தில் கிராமிய வீடமைப்புத் திட்டத்துக்கு 30 இலட்சம் ரூபாவை வீடமைப்பு அதிகார சபை வழங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் கிராமப்புற வீடமைப்புத் திட்டத்தை அமுல் செய்யும் வகையில் வழங்கப்பட்ட 52 இலட்சம் ரூபா பணத்தில் கடந்த மாத இறுதி வரை முப்பது இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது:

ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ள இக் கடன் மூலம் 600 வீடுகள் கட்டி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 400 வீடுகளை இவ்வருட இறுதிக்குள் கட்டுவதற்கு கடன் வழங்கப்பட இருப்பதாக அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

### ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் அடுத்தஆண்டு பயில்வதற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பங்கள் நாளை வெளிவர இருக்கும் வர்த்தமானியில் வெளியிடப்படும்:

இத்தகவலைக் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விண்ணப்ப முடிவுதிகதி செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி என்றும் அவர் தெரிவித்தார்.

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுககு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
O/L
பிரிவு 6 Day Classes (8.30 - 1.30)
Evening Classes (2.00 - 4.00)
ஆரம்பம்: 14 - 8 - 1989
★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு: ★
விஞ்ஞானம்:- திரு: J. R. சூரி
கணிதம்:- திரு. செல்வா
ஆங்கிலம்:- திரு. விஸ்வநாதன்
தமிழ்:- சமயம்:- திரு. சுந்தரலிங்கம்
சமூகக்கல்வி:- திரு. கருணாகரன்
திரு. சுந்தரமூர்த்தி
வர்த்தகம்:- திரு. கருணாகரன்
முக்கிய குறிப்பு:
கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்.
● விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
(சி/3255)

LANKASOY
சோயா மீட் அண்ட் மீல்மேக்கர்
மேற்படி உற்பத்திப் பொருட்கள் ஒல்லாந்திலிருந்து (HOLLAND) இறக்குமதி செய்யப்பட்ட மூலச்சேர்வைப் பொருட்களிலிருந்து, பூரணமான எமது தொழிற்சாலையில் இலங்கையிலேயே உற்பத்திச் செய்யப்படவுள்ளது
ஸ்பைசஸ் அண்ட் எசன்சஸ் (சிலோன்) லிமிட்டெட்
(போர்ப்ஸ் அண்ட் வோக்கர் குழுவின் துணைநிறுவனம்)
46/38 நவம் மாவத்தை, கொழும்பு 2.
தொலைபேசி: 27961-7 26986
TEAM — 2030

அர்ச்சுனா
கல்வி - முயற்சி - பெருவாழ்வு

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்ய விரும்புகிறீர்களா?
அவர்களின் அறிவுப் பசிக்கு பல்சுவை விருந்து அளிக்க விரும்புகிறீர்களா?
உடனே
'அர்ச்சுனா' வை வாங்கி
மாதந் தோறும் பரிசாக வழங்கவும்
விலை ரூபா 4/- மட்டுமே.
ஆண்டுச் சந்தா ரூபா 55/- (தபால் செலவு உட்பட)
காசோலை / காசுக்கட்டளை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி த. பெ. எண் 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கிரிக்கெட்

# தெரிவுக்குழுவின் தலைவராக அனுரா தென்னக்கோன்

கொழும்பு, ஆக. 11

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரான அனுரா தென்னக்கோன் இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக் குழுவுக்கு இவர் தலைமை வகித்தார்.

ரஞ்சித் பெர்னாண்டோ, மைக்கல் திசேரா, மும்தாஸ் யூசுப் ஆகியோரும் கிரிக்கெட் தெரிவுக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

மைக்கல் திசேராவும் முன்னாள் இலங்கை அணியின் தலைவராகவிளங்கியவர். இலங்கை அணிக்குத் தலைமை தாங்கியவர்களுள் சிறந்த தலைவராகக் கணிக்கப்பட்டவர்.

இலங்கைக்குழு டெஸ்ட் அந்தஸ்து பெறாத வேளையில் றிச்சி பெனோட் தலைமையிலான ஆஸ்திரேலிய அணிக்கெதிரான போட்டியில் 50 ஓட்டங்களைப் பெற்றமைக்காக ஆஸ்திரேலிய வீரர்களால் பாராட்டப் பெற்றவர்.

சிறந்தொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் விக்கெட் காப்பாளராகவும் விளங்கியவர் ரஞ்சித் பெர்னாண்டோ.

இவர் மைக்கல் திசேரா, அனுரா தென்னக்கோன் ஆகியோரது தலைமையின் கீழ் இலங்கை அணிக்காக ஆடியவர். தெரிவுக்குழுவின் தலைவர் கடந்த முதலாம் திகதியில் இருந்து இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-6)

## விளையாட்டு அரங்கு

15 ஆவது

## தேசிய விளையாட்டு விழா இன்று ஆரம்பமாகின்றது

### சுகததாஸ விளையாட்டரங்கில்

கொழும்பு, ஆக. 11

15 ஆவதுதேசியவிளையாட்டு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள இவ்விழாவை முதலில் கண்டி அஸ்கிரிய சர்வதேச மைதானத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டு இருந்தது.

பிரதம மந்திரி டி. பி. விஜேதுங்க இவ்விழாவை இன்று மாலை 2.00 மணியளவில் ஆரம்பித்து வைப்பார்.

உடற்பயிற்சி, மெய்வல்லுனர் போட்டிகள் உட்பட பெண்களுக்கான கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், ஹாக்கி ஆகியவற்றின் இறுதிப் போட்டிகளும் —

ஆண்களுக்கான பாரம்தூக்குதல், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், ஹாக்கி ஆகிய இறுதிப்போட்டிகளும் இம் மூன்று தினங்களும் நடைபெறும்.

இறுதி நாளான 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைமாலை 4.00 மணியளவில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

அன்றைய தினம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (த-6)

மக்கள் முகம்

## ஓய்வு பெற்றார்



''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற முது மொழிக்கு இலக்கணமாய்த் திகழ்ந்து ஆசிரியத் தொழிலுக்கே அணி செய்த திரு. கு. நடேசபிள்ளை 35 வருட கால ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மாத்தளை இந்து மகா வித்தியாலயத்தில் முதன் முதலாக ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் அவ் வித்தியாலயம் பல வழிகளிலும் முன்னணிக்குவரக் காரணகர்த்தாவாக விளங்கினார்.

பின்னர் விமன்காமம் மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று அங்கு ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். (இ-168)

## ஊர்காவற்றுறை ஓய்வூதியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஆக. 11

ஊர்காவற்றுறை ஓய்வூதியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்:- திரு. என். பி. ஐயர், செயலாளர்:- திரு. பி. இ. அந்தோனிப்பிள்ளை, பொருளாளர்:- திரு. கே. பால சந்திரன், உப தலைவர்:- திரு. லீனஸ் சூசைப்பிள்ளை, உப செயலாளர்:- திரு. ச. அந்தோனிப்பிள்ளை.

ஒன்பது பேர் நிருவாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (த)

# இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறையில் பல பிரச்சினைகள்

### கருத்தரங்கில் ஆய்வுரை

யாழ்ப்பாணம் ஆக. 11

'இன்று இந்திய அரசு ஒதுக்கப்பட்ட சாராருக்கும் மலைச்சாதியினருக்கும் கல்வித் துறையிலும், வேலை வாய்ப்புத் துறையிலும் பல சலுகைகளை வழங்கி வருகிறது. ஆனால்கிறிஸ்தவர்கள் ஒதுக்க பட்டவர்களாக இருந்தாலும் இந்தச் சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இதனால் பலகிறிஸ்தவர்கள் தமது சமயத்தை விட்டொழிகின்ற நிலை இந்தியாவில்ஏற்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன ஆதரவில் நடந்த கருத்தரங்கில் ஆய்வுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

புதன்கிழமை மாலை நடந்த இக் கருத்தரங்கில் 'தென்னிந்தியாவும் கிறிஸ்தவமும்' என்னும் தலைப்பில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

'தென் இந்தியாவில் கிறிஸ்தவத் திருச்சபை பலம் வாய்ந்த அடித் தளத்தைக் கொண்டிருகின்ற போதிலும், பல பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தியாவில் கிறிஸ்தவர்கள் சிலர் வீடுகளிற் கிறிஸ்தவர்களாகவும் வெளியிடங்களில் இந்துக்களாகவும் நடிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

பொருளாதார ரீதியாகப் பின் தங்கியுள்ள கிறிஸ்தவர்கள் இப்போது விடுதலை இறையியலினால் பெரிதும் கவரப்பட்டுள்ளனர்.

இதனால் அரசாங்க நிறுவனங்களுக்கு எதிராகவும், முதலாளித்துவத்திற்கெதிராகவும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப் போராட்டங்கள் அரசினருக்கும், முதலாளிகளுக்கும் கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்திய அரசியல் யாப்பு சிறுபான்மை இனத்தவர் அனைவருக்கும் தக்க பாதுகாப்பை அளித்துள்ளது.

ஒவ்வொரு சமயத்தவரும் தமது சமயத்தைப் போதிக்கவும், அனுஷ்டிக்கவும், பிரசாரம் செய்யவும் உரிமை உண்டு என்று அரசியல் யாப்பு கூறுகின்றது.

ஆனால் நடைமுறையில் கிறிஸ்தவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். வருங்காலத்தில் இந்திய சமய உணர்வுகள் எவ்வாறு செயற்படும் என்பதனை இப்பொழுது கூறமுடியாதிருக்கின்றது.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## மணிவிழா

யாழ்ப்பாணம், ஆக. 11

முதுபெரும் எழுத்தாளர் சொக்கனுக்கு மணிவிழா கொண்டாட மணிவிழாச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மணிவிழா சம்பந்தமாக ஆராய நாளை சனிக்கிழமை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது. (இ-3)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. வில்லியம் ஜெயராஜா

(நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்)

பிறப்பு: 20-04-1949

இறப்பு: 12-07-1989

உங்களைப் பறிக்கலாம்!
உங்கள் நினைவுகளைப் பறிக்க முடியாது!!

இறை சித்தப்படி எம்மிடமிருந்து அகாலமாகப் பறிக்கப்பட்ட வில்லியம் ஜெயராஜாவிற்காக செபிப்போம்.

அப்பா, அம்மா, மனைவி, சகோதரர், மைத்துனர்கள், அல்லைப்பிட்டி.

(1479)


## நன்கொடைப்பண பதிவு அட்டைகள்

புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரணத் திட்டத்தால் வழங்கப்பட இருக்கின்ற உற்பத்தித்திறன் முயற்சிக்கான நன்கொடைப்பணம் நாலாயிரம் ரூபா பெறுவதற்கான பதிவு அட்டைகள்யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன. (க-51)

## சனசமூக நிலைய சமாசக் கூட்டம்

யாழ். மாநகர சனசமூகநிலையங்களின் சமாசத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளைய தினம் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில், யாழ் சிவன் பண்ணை வீதியில் உள்ள சனசமூக நிலையங்களின் சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெறும். (க-13)

## சிற்பக் கலாமணிக்கு பாராட்டு

சாவகச்சேரி, ஆக. 11

சாவகச்சேரி துர்க்கை அம்மன் தேவஸ்தான சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாவின் போது சித்திரத் தேரை உருவாக்கிய சிற்பக் கலாமணி திரு. க. கலாமோகனைப் பாராட்டும் வைபவம் ஒன்று நடைபெற்றது.

சாவகச்சேரி நகர சபை ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

பிரதமகுரு சிவகாம ஞான சாகரம் சிவஸ்ரீ க. சோமசுந்தரக் குருக்கள், சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கி. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் உட்படப் பலர் சிற்பக் கலாமணியைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ ப. கணபதிசர்மா சிற்பக் கலாமணி காலமோகனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் உதவிக் கலைஞர்களையும் பாராட்டினார். (க-31)

## தொண்டர் அறிமுக விழா

சாவகச்சேரி, ஆக 11

கைதடி நுணாவில் கிராமிய செயற்குழு, குடும்ப நலத் திட்ட சங்கத்தின் தொண்டர் அறிமுக வைபவத்தை சமீபத்தில் நடத்தியது.

திரு. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுக விழாவை அடுத்து கலைவிழா ஒன்றும் இடம் பெற்றது. (க-31)

# தரமானவர்கள் இருக்க ஏன் தமிழகத்துக்கு?

### இசை அரங்கேற்றத்தில் கேள்வி

இன்று தமிழகம் சென்று வாய்ப்பாட்டு சங்கீதக்கலையை அதிகமானவர்கள் பயில்கிறார்கள். இங்கு சங்கீதம் பயின்று தரமானவர்கள் உருவாகும் போது ஏன் தமிழகம் செல்ல வேண்டும்.

இப்படிக் கேள்வி எழுப்புகிறார் ''பல்லவி'' ஆசிரியரும் சட்டத்தரணியுமான திரு. டபிள்யு. எஸ். செந்தில்நாதன்.

நல்லை ஆதீனத்தில் நடந்த ஆலாபனாவின் ஆதரவிலான இசை அரங்கேற்றத்தில் இசை மதிப்புரை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் உள்ளூரில் படித்து இசைக் கலையில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் இன்றுள்ளனர். அந்நிலையில் ஏன் தமிழகம் சென்று நாம் சங்கீதக்கலையை பயில வேண்டும் என்றார். (இ-3)

## மறுவாழ்வு உதவி

சாவகச்சேரி ஆக 11

அறவழிப் போராட்டக்குழுவின் மறு வாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் வைபவம் கண்டி வீதி, கைதடி, நுணாவிலுள்ள அறவழிப் பணிமனையில் இடம் பெற்றது.

குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சாவகச்சேரி நீதிபதி திரு க. திருநாவுக்கரசு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வன்செயல்கள்காரணமாகக் கணவன்மார்களை இழந்த 46 குடும்பங்களுக்கு தேசிய சேமிப்புவங்கியின் அறக்கொடைத் திட்டசான்றிதழ்களும் மட்டுவில் தெற்கில் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு குசினிப் பாத்திரங்களும் வழங்கப்பட்டன. (க-31)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி தர்மலிங்கம் சுந்தரம்

தோற்றம்: 07-07-1925

மறைவு: 14-07-1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புடன் எம்மை ஆதரித்து எமக்கு வழிகாட்டிய குலவிளக்கே! எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்? உங்கள் ஆத்மா சாந்தியடைய இருபாலை சற்பக விநாயகரை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

12-08-89 சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கருணாகரம்'
டச்சு றோட்,
இருபாலை.

(11797)

ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 16-04-1943

விண்ணில்: 24-07-1988

திதி: 11. 08. 1989

திருமதி
சாரதாமணி செல்வரத்தினம்
(காலம் சென்ற ஐ செல்வரத்தினம் [பத்தர்] அவர்களின் மனைவி)

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ!
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையில்
உங்களை இழந்து மனம் துடித்தோம்
அளவிலாக் கண்ணீரை விழிகளிலே நிறைத்து விட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரே!
எங்களை வாழ வைக்க நீங்கள் பட்ட பாட்டினை
எண்ணி எண்ணி மனது துடிக்கிறதம்மா!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்.

உங்கள் அன்பின்றி ஏங்கும் அருமைச் செல்வங்கள்:
பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள்.

41, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(1481)

N. E. C. இணுவில்

புதிய நிர்வாகத்தின் கீழ் மீண்டும் சகல வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன:

A/L 89, 90

கலை, விஞ்ஞான வர்த்தக வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்: சனி (12 - 08 - 1989)

A/L 91

ஆரம்பம்: சனி (12 - 08 - 1989) 4 p.m.

ஆண்டு 6 ஆண்டு 11வரையான வகுப்புக்கள் யாவும் வழமையான ஆசிரியர் குழுவினால் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன.

[1473]

அந்தியகால சேவையில் முதிர்ச்சி பெற்றவர்களது நவீன ஸ்தாபனம்!

குடாநாட்டு சகல கிராமங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது:

தொடர்பு கொள்ளவும் :

பிறைற் ஹவுஸ்

(புனித சந்தியோமையோர் ஆலய மருங்கு)
210, பிரதான வீதி
யாழ்ப்பாணம். (C/3199)

தான்சன் கல்வி நிலையம்
தெல்லிப்பழை.

O/L DAY CLASS

ஆரம்பமாகியுள்ளது.

விஞ்ஞானம்
J. R. சூரி

கணிதம்
மகேந்திரன்-மதி

ஏனைய சகல பாடங்களும் நடைபெறுகின்றன.
(11800)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில் தொகுதி பங்கீடு ராஜீவ்-ஜெயலலிதா கைகளில்

திருச்சி, ஆக 9

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டில் தொகுதி பங்கீடு செய்வது பற்றி பிரதமர் ராஜீவும் ஜெயலலிதாவும் பேசி முடிவு செய்வர்.

அ.தி.மு.க துணைப் பொருளாளர் திரு: சு திருநாவுக்கரசு செய்தியாளரிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

கேள்வி: அ.தி.மு.கவில் பெரும் மாறுதல் நடைபெறும் என்று கூறப்படுகிறதே?

திருநாவுக்கரசு: ஏற்கனவே நிறைய மாறுதல் வந்து விட்டதே. இது போதாதா?

கேள்வி: வீரப்பனுக்கு இணைப்பொதுச் செயலாளர் பதவி கொடுக்கப்பட்டு இருப்பதால் கட்சியில் நீங்களும் சாத்தூர் இராமச்சந்திரனும் புறக்கணிக்கப்படுவதாகக் கூறப்படுகிறதே!

திரு: அ.தி.மு.கவில் வீரப்பனை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் ஜெயலலிதா அவருக்குப் பதவி கொடுத்துள்ளார். அவர் உற்சாகப்படுத்தப்படுவதால் நாம் புறக்கணிக்சப்படுவதாகப் பொருள் அல்ல!

கேள்வி: வீரப்பன் உங்களை பொதுக் கூட்டங்களில் மறைமுகமாகத் தாக்கிப் பேசுவதாகக் கூறுகிறார்களே!

திரு: வீரப்பன் யாரையும் நேரடியாகத் தாக்கித்தான் பேசுவார்.

கேள்வி: உங்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் கருத்து வேறுபாடு என்று கூறப்படுகிறதே!

திரு: அப்படி இல்லை (எ)

## ஆயுதக் குறைப்புப் பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லை என அறிவிப்பு!

### அமெரிக்க - சோவியத் அமைச்சர்கள் மீண்டும் பேசுவர்

ஜெனிவா, க. 10

அணு ஆயுதக் குறைப்பு சம்பந்தமாக அமெரிக்க — சோவியத் பிரதிநிதிகளுக்கு இடையே நடைபெற்று வந்த பேச்சுக்கள் எதுவித முன்னேற்றமின்றி முடிவடைந்தன.

அமெரிக்க அதிபராக ஜோர்ஜ் புஷ் பதவி ஏற்றபின்னர் அணு ஆயுதக் குறைப்புப் பற்றி இடம் பெற்ற முதல் கட்டப்பேச்சு இதுவாகும்.

ஜெனிவாவில் இப்பேச்சுக்கள் இடம் பெற்றன.

சோவியத்சார்பில் பிரதம அதிகாரியாக யூரி நஸார்கின் கலந்து கொண்டார்.

அமெரிக்கக் குழுத்தலைவராக றிச்சேர்ட் பேர்ட் கலந்து கொண்டார்.

முக்கியமான அம்சங்களில் இன்னும் முன்னேற்றம் காணப்படவில்லை என்று சோவியத் பிரதிநிதி சொன்னார்.

முக்கிய அம்சங்களில் பெரிதான முன்னேற்றம் காணப்படவில்லையாயினும் வேறுசில விஷயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

ஏழு வாரங்களாக நடந்த பேச்சுக்கள் கடந்த திங்கட்கிழமை முடிவடைந்தன.

முக்கிய அணு ஆயுதக் குறைப்புப் பற்றிய உடன்பாடு ஒன்றுக்கு இப்பேச்சுக்கள் வழிவகுக்குமா? என்பதைச் சொல்ல முடியாதிருப்பதாக சோவியத் பிரதிநிதி சொன்னார்.

அடுத்த கட்டப் பேச்சுக்கள் அமெரிக்காவில் வருகிற செப்டெம்பர் 19, 20 ஆம் திகதிகளில் வெளியுறவு அமைச்சர் மட்டத்தில் நடைபெறவுள்ளது.

கடலில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள், விண்ணில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகிய விஷயங்களிலேயே இருநாடுகளுக்கும் இடையே பலத்த கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## பாலத்துடன் ஆற்றில் ரயில் விழுந்து 85 பயணிகள் பலி

### மெக்ஸிக்கோவில் பயங்கரம்

மெக்ஸிக்கோ, ஆக. 10

வட மெக்ஸிக்கோவில் நேற்று நடந்த கோர ரயில் விபத்தில் 5 பயணிகள் உயிரிழந்தனர்.

கலிபோர்னியா நோக்கி பசுபிக் கரையோரமாகச் சென்று கொண்டிருந்த இந்த ரயில் பாலம் ஒன்றின் மீதாகச் சென்று கொண்டிருந்த போது ஆறு ஒன்றினுள் விழுந்தது.

கடும் மழை காரணமாக ஆறு கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அதனால் பாலம் பலவீனம் அடைந்திருந்தது என்றும் ரயிலுடன் பாலம் ஆற்றினுள் விழுந்தது என்றும் பி.பி.சி அறிவித்தது.

தொழில் வேலைவாய்ப்புப் பெறுவதற்காக இந்த ரயிலில் சென்றவர்களில் பலர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மெக்ஸிக்கோவில் இந்த ஆண்டு 6 ரயில் விபத்துக்கள் இடம்பெற்றன. கடைசியாக இடம்பெற்ற விபத்தில் 40 பயணிகள் உயிரிழந்தனர்

### நெருக்கடி

போலந்தில் புதிய அமைச்சரவை ஒன்றை அமைப்பதில் பிரதமர் கிஷோவுக்கு நெருக்கடி உருவாகி உள்ளது.

கம்யூனிஸ்ட் அல்லாத சகல அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று சொலிடரிட்டி தொழிற்சங்கத் தலைவர் வால்சே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதுவே இந்த நெருக்கடிக்குக் காரணம்.

இதனிடையில் சிறிய அரசியல் கட்சிகள் இரண்டு, திரு. வால்சேக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (எ)

### பணயக் கைதி விடுதலை விவகாரம்

## முடக்கப்பட்ட ஈரான் சொத்துக்களை திருப்பி வழங்க முடியாது என அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஆக 10

பணயக் கைதிகளை விடுதலை செய்வதற்காக அமெரிக்காவில் முடக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள ஈரானின் சொத்துக்களை விடுவிக்கப் போவதில்லை என்று வாஷிங்டன் அரசு அறிவித்துள்ளது.

ஈரானில் ஷா மன்னரின் ஆட்சி கவிழ்ந்து ஆயதுல்லா கோமெனியின் இஸ்லாமிய அரசு பதவி ஏற்றதைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்த ஈரானின் சொத்துக்கள் அனைத்தும் ஜனாதிபதி கார்ட்டர் தலைமையிலான அரசினால் முடக்கப்பட்டன.

இதன் காரணமாக அமெரிக்க வங்கிகளில் போடப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான டாலர் பணம் மற்றும் ஷா மன்னர் காலத்தில் ஆடர் செய்யப்பட்டிருந்த யுத்த தளபாடங்களை ஈரானினால் இன்னமும் திருப்பிப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்து வருகிறது.

அவற்றைத் திருப்பித் தர முன்வந்தால், அமெரிக்க பணயக் கைதிகள் விடுதலை விவகாரத்தில் உதவ முடியும் என்று ஈரான், அமெரிக்காவிற்குக் கூறியிருந்தது.

ஈரானின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று அமெரிக்கா இப்போது அறிவித்துள்ளது.

அப்படி முடக்கப்பட்ட சொத்துக்களைத் திருப்பி ஈரானுக்குக் கொடுப்பது பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு பணயக்காக கொடுப்பது போலாகிவிடும் என்று அமெரிக்க வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

## பாகிஸ்தானிலிருந்து 'சிந்து' வை பிரிக்கும் சதி பற்றி பெனசிர்!

ஹைதராபாத், ஆக.10

பாகிஸ்தானில் இருந்து சிந்து மாகாணத்தைப் பிரிக்க சதி நடைபெறுவதாக பிரதமர் பெனசிர் பூட்டோ குற்றஞ் சாட்டினார்.

ஹைதராபாத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது:

பாகிஸ்தானின் நலனை விரும்பாத எதிரிகள் இத்திட்டத்தைத் தீட்டியுள்ளனர்.

இதற்கு எனது அரசு இடம் கொடுக்காது.

இப்படி பிரதமர் பெனசிர் குறிப்பிட்டார். (எ)

### சறுக்குவண்டியில் தென்துருவம்

பாரிஸ், ஆக. 10

தென் அமெரிக்காவின் தென்பகுதியில் உள்ள மலைப் பிரதேசத்தில் இருந்து சர்வதேச குழு ஒன்று, தென் துருவ பயணத்தைத் தொடங்கியது.

இந்தக் குழுவில் 6 பேர் இடம் பெற்று உள்ளனர், 36 நாட்கள் இழுக்கக் கூடிய 6 சறுக்கு வண்டிகளில் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ஒரு நாளுக்கு 30 முதல் 45 கிலோ மீற்றர் தூரம் வரை அவர்கள் பயணம் செய்கின்றனர்.

மொத்தம் 6 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தூரத்தை 6 மாதங்களில் கடந்து தென் துருவத்தில் உள்ள ரஷ்ய தளத்தை அடைவார்கள். (எ)

### ஆறு வீரர்கள் சார்பில் கபில் இறைஞ்சுகிறார்

## பொதுமக்கள், பத்திரிகையாளர் எம்மைக் காப்பாற்ற வேண்டும்!

### இல்லையேல் கிரிக்கெட் உலகில் காணமற் போவோம்

பம்பாய், தாஜ் இன்டர் கொன்டினென்டல் ஹொட்டலில் செய்தியாளர் மாநாடு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

ஓராண்டு காலத்தடை உத்தரவுக்கு இலக்கான கிரிக்கெட் வீரர்கள் கபில்தேவ், வெங்சாகர், கிரான்மோரே, முகமது அஸாருதீன் வரிசையாக செய்தியாளர் முன்னிலையில் அமர்ந்திருக்கின்றனர்.

ரவிசாஸ்திரி லண்டனில் இருப்பதால் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை

#### கபில்தேவ் பேசுகிறார்

மாநாட்டை கபில்தேவ் ஆரம்பித்து வைக்கிறார்.

இந்திய கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தப்படி நாம் டெஸ்ட் போட்டி ஒன்று முடிந்த ஓராண்டு காலத்துக்கு பத்திரிகையாளருக்கு பேட்டி அளிக்க முடியாது.

இப்போது நகம் ஓராண்டு காலம் விளையாட தடை விதிக்கப்பட்டது. அது பற்றி உங்களுடன் பேச பேட்டி அளிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை மீறுகின்றோம்.

கிரிக்கெட் சபையுடன் நாம் மோத விரும்பவில்லை. பதிலாக சபையுடன் ஒத்துப் போகவே விரும்புகிறோம்.

#### கடுமையான நடவடிக்கை

கபில்தேவ்: நாம் எப்போதும் நல்லது பற்றியே சிந்தித்து வருகிறோம். தடை உத்தரவை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பது பாதகமான விளைவைத்தான் ஏற்படுத்தும். எமது விஷயத்தில் கிரிக்கெட் சபை கடுமையாகத்தான் இருக்கிறது இப்படியான தண்டனை பெற அப்படி நாம் என்ன செய்து விட்டோம். கிரிக்கெட் விளையாட்டில் எமக்கு சரியான காதல். எமது நாட்டின் பிரதிநிதிகளாக கிரிக்கெட் விளையாடவே விரும்புகிறோம்; கடந்த காலங்களில் இதை நாம் சமயக் கடமைகளில் ஒன்றாக கருதியே செய்து வந்தோம். அதற்காக எமக்குக் கிடைத்த பரிசு இது தானா?"

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு சென்று கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டதற்கான காரணங்களை கபில்தேவ் விவரித்தார்:-

"இந்த இரண்டு நாடுகளிலும் லட்சக் கணக்கான இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள் வசிக்கிறார்கள். அவர்களை மகிழ்ச்சிப்படுத்தவே அங்கு விளையாடினோம்.

#### கவாஸ்கர் அணி

இதற்காக நாம் பணம் பெறவில்லை. தினசரி உணவு மற்றும் செலவுகளுக்கான அலவன்ஸாக 40 டாலர் ஒருவருக்கு தினமும் கிடைத்தது.

நாம் 'கவாஸ்கர் அணி' என்ற பெயரில் விளையாடினோம். எதிராக 'இம்ரான் அணி' விளையாடியது.

இருந்தும் சபைக்கு நாம் வருத்தம் தெரிவித்தோம். தவறு இழைத்து விட்டோம் என்று கூறினோம்.

நாட்டின் பிரபல வீரர்கள் வாயிலிருந்து 'வருந்துகிறோம்' என்ற சொல் வெளிவந்தது கிரிக்கெட் சபைக்கு



கபில்தேவ்

போதாதா? அச்சொல்லுக்கு அர்த்தமே இல்லையா?

#### வருந்துகிறோம் என்றால் போதாதா?

சபை அழைத்து எம்மை விசாரித்தது. அப்போது நாம் மன்னிப்பு கோரினோம் இதைவிட நாம் வேறு என்ன செய்ய வேண்டும்? எமது தலையை உடைக்க வேண்டுமா?

மனிதர்கள் அனைவரும் பூஜைகள் நடத்துகின்றார்கள்

நாம் செய்யும் பூஜை கிரிக்கெட் விளையாடுவதே. தடை உத்தரவால் கிரிக்கெட் சபை நாம் பூஜை செய்யும் உரிமையை பறித்து விட்டது. அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் போட்டிகளில் கூட நாம் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

#### இதுதான் பரிசா?

நிதி உதவிக்காக எத்தனையோ போட்டிகளில் கலந்து கொண்டோம். அவற்றிற்கு எல்லாம் தடை உத்தரவு தான் பரிசு என்றால் இதற்கு மேல் என்னால் ஒன்றுமே சொல்ல முடியாது.

எமது நிலையை பொதுமக்கள், பத்திரிகைகள் முன்பாக நாம் வைக்கிறோம். இது ஒரு பகுத்தறிவு பூர்வமான நிலை என்று நான் கருதுகிறேன்.

#### சாதுவை பூசை செய்யாதே என்றால்...

கிரிக்கெட் என்பது வெவ்வேறு விதமான மனிதர்களுக்கு வெவ்வேறு விதமாக கருத்தை கொடுக்கிறது.

வீரர்களுக்கு கிரிக்கெட் என்றால் உயிர் போன்றது.

ஓராண்டுக்கு வீரர் ஒருவரை கிரிக்கெட் விளையாடக்கூடாது என்று தடை விதிப்பது அவரை நிரந்தரமாகத் தண்டிப்பது போன்றது.

மதவாதியைப் பார்த்து வழிபாடு செய்யாதே என்பதற்கு இது சமம்.

இப்படி தடைவிதிப்பதற்கு, நாம் தென் ஆபிரிக்கா சென்று விளையாடவில்லையே.

கிரிக்கெட் விளையாட்டை விரும்பும் பொதுமக்கள் எம்மைப் பாதுகாக்காவிட்டால், நாம் காணமற் போய்விடுவோம்.

பத்திரிகைகள், பொதுமக்கள் தான் எம்மைக் காப்பாற்ற வேண்டும்;

இப்படி கபில்தேவ் மாநாட்டில் தெரிவித்தார்.

### ஆறு வீரர்கள் மீது தடை காரணமாக

## இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை தமிழர் ஸ்ரீகாந்திற்குக் கிடைக்குமா?

கடந்த முதலாம் திகதி சென்னை, சிதம்பரம் விளையாட்டரங்கில் 'அண்ணா பவிலியனை' முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார்.

"இந்த அரங்கிற்கு பல முறை வந்திருக்கிறேன். ஆனால் ஆடுகளத்தில் (turf) முதன் முறையாக இன்று தான் இறங்கியிருக்கிறேன்"- என்று கூறிய கலைஞர், தனது ஆசை ஒன்றையும் அங்கு வெளியிட்டார்.

அவரது ஆசை இவ்வளவு விரைவாக நிறைவேறக்கூடிய வாய்ப்பு உருவாகும் என்று அன்று யாருமே எண்ணியிருக்கவில்லை. ஏன் கலைஞர் கூட எண்ணியிருந்திருக்க மாட்டார்.

கலைஞர் வெளியிட்ட ஆசை என்ன?

#### கலைஞர் ஆசை

ஸ்ரீகாந்த் இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக என்று நியமிக்கப்படுகிறாரோ, அன்று தமிழக அரசு பெரிய விருந்துபசாரம் ஒன்றை நடத்தும் என்பதே அது:

இந்த ஆசை நிறைவேறக் கூடியதாக அப்படி நடந்தது தான் என்ன?

இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர்கள் ஆறுபேர் ஒரு வருடத்திற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில்கலந்துகொள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை கடந்த (6-8-89) ஞாயிறு தடை உத்தரவு விதித்துவிட்டது:

#### தண்டனை அடைந்தவர்கள்

இத்தண்டனைக்கு இலக்கானவர்கள், இந்திய அணியின் கப்டன் திலிப் வெங்சாக்கர், கபில்தேவ், அருண்லால், கிரான்மோர், முகமதுஅஸாருதீன், ரவி சாஸ்திரி,

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு விட்டு இந்த 6 வீரர்களும் அமெரிக்கா சென்றனர்.

இவர்களுடன் சென்ற கனிஷ்ட வீரர்களான சஞ்சே மஞ்ரேகர், வெங்கடரமணா, ரொபின்சிங், அஜய் சர்மா, சஞ்சீவ் சர்மா, ஹிர்வானி ஆகியோருக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதப் பணம் செலுத்தப்படும் வரை இவர்களும் கிரிக்கெட் விளையாட முடியாது:



ஸ்ரீகாந்த்

சேட்டன் சர்மா, அர்ஷாத் ஐயூப் ஆகிய வீரர்களுக்கு விளக்கம் அளிக்க வருகிற செப்டம்பர் 15 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது:

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று கிரிக்கெட் விளையாடக்கூடாது என்று இந்தியக் கிரிக்கெட் சபை விதித்த உத்தரவை மீறியதற்கே இத்தடை உத்தரவும் தண்டனையும் ஆகும்.

5-8-1690 வரை இத்தடை உத்தரவு அமுலில் இருக்கும்.

#### இழக்கபபோகும் சர்வதேசப் போட்டிகள்

இத்தடை உத்தரவு நீக்கப்படவில்லையானால் இந்த ஆறு பிரபல கிரிக்கெட் வீரர்களும்-

★ நேரு நூற்றாண்டு சுற்றுப்போட்டி,

★ ஷார்ஜா கிண்ணப் போட்டி,

★ பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்ட் பயணம்.

★ நியூசிலந்து டெஸ்ட் பயணம் - ஆகிய சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாத நிலை ஏற்படும்.

இத்தடை உத்தரவு அறிவிக்கப்பட்டபோது, வெங்சாக்கர் மற்றும் கபில்தேவ் ஆகியோர் பம்பாயில் கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்து கொண்டிருந்தனர்.

வான்காட் விளையாட்டரங்கு அலுவலகத்திற்குச் சென்ற போதுதான் அவர்களுக்குத் தடை உத்தரவு தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் திங்கட்கிழமை கபில்தேவ் தலைமையில் வீரர்கள் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். லண்டனில் தங்கியுள்ள ரவி சாஸ்திரியும் இச்செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தார்.

#### கபில்தேவ் வருத்தம்

கபில்தேவ் செய்தியாளர் மாநாட்டின் முடிவில் 'நடந்தவை குறித்து வருந்துகிறோம் என்று நாம் சொல்கிறோம். ஆகவே நடந்தவற்றை மறந்து மன்னித்துவிடக் கூடாதா?'- என்று கேட்டார்.

இந்திய கிரிக்கெட் சபைக்கு அனுப்பிய கடிதத்தின் நகலையும் திரு. கபில்தேவ் செய்தியாளர் மாநாட்டில் [illegible] துக் காட்டினார்.

கடிதத்தில் எந்த இடத்திலும் மன்னிப்புக் கேட்பதாக 6 கிரிக்கெட் வீரர்களும் குறிப்பிட்டிருக்கவில்லை.

#### அப்பீல் விசாரணை ஆகஸ்ட் 15இல்

இந்த நிலையில் கிரிக்கெட் வீரர்களின் மேன்முறையீடுகளை விசாரிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்குழு இம்மாதம் 15ஆம் திகதி கூடுகிறது.

சபையின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தீர்ப்பே இறுதியானது: அதை செயற்குழுவால் மாற்ற முடியாது என்றும் அறிவிக்கப்படுகிறது:

இதுதான் நிலை என்றால்—

இந்திய அணியின் அடுத்த கப்டன் யார்? என்ற கேள்வி எழுகின்றது

கலைஞரின் ஆசை நிறைவேறும் வாய்ப்பு இங்குதான் காணப்படுகிறது:

ஸ்ரீகாந்துககுத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கக்கூடும்.

மேற்கிந்தியத்திவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது 'கை முறிந்த' காரணத்தால் இடைநடுவில் தாயகம் திரும்பியவர் ஸ்ரீகாந்த்.

இதற்காக திலிப் வெங்சாக்காரின் கண்டனத்திற்கும் இலக்கானவர்.

கை முறிவு ஏற்படாமல் இருந்திருப்பின் ஸ்ரீகாந்த்தும் அமெரிக்கா சென்றிருப்பார்; தண்டனையும் பெற்றிருப்பார்.

ஆனால் 'கை முறிந்தது' அதிஷ்டம் என்றால் அது இந்திய அணியின் கப்டனாக வர ஸ்ரீகாந்துக்குக் கைகொடுக்கக் கூடும்.

வருகிற 15-ஆம் திகதி இந்தியக் கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் முடிந்த பின்னர்தான் எல்லாம் தெரிய வரும்.

### பணயக்கைதி விவகாரம்

## புஷ்ஷுடன் ஷாமிர் பேச்சு

வாஷிங்டன், ஆக. 11

பணயக்கைதி விவகாரம் தொடர்பாக நேற்று இஸ்ரவேலிய பிரதமர் யாட்ஷிக் ஷாமிர் தொலைபேசி மூலம் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உடன் பேசினார்;

பேச்சுக்கள் பத்து நிமிடங்கள் நீடித்தன.

அமெரிக்க இராணுவ அதிகாரி கேர்னல் ஹிக்கின்ஸ் கொல்லப்பட்ட பின்னர் லெபனானில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பிரசைகளை விடுவிக்க அதிபர் புஷ் ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்:

கடந்த 10 நாட்களாக இடம்பெற்று வந்த ராஜதந்திரப் பேச்சுக்கள் பலனளிக்காத நிலையில்தான் இஸ்ரவேலிய பிரதமர் ஷாமிர், அதிபர் புஷ் உடன் தொடர்பு கொண்டார்.

பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது:

இதேவேளை—பணயக் கைதிகளை வைத்துள்ள கெரில்லாக் குழுவுடன் நேரடியாகப் பேசப் போவதில்லை என்று அதிபர் புஷ் அறிவித்துவிட்டார் (எ)

### அணிசேரா மாநாடு

அணிசேரா இயக்கத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு இம்முறை யூகோஸ்லேவியா தலைநகர் பெல்கிறேடில் நடைபெறவுள்ளது.

தற்போது இயக்கத்தின் தலைவராக சிம்பாப்வே ஜனாதிபதி றொபர்ட் முகாபே பணிபுரிகிறார்.

அடுத்த ஆண்டுத் தலைமைப் பதவி யூகோஸ்லேவியாவிற்குக் கிடைக்கிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.ர் திருவிழாவை முன்னிட்டு
அகோப்பி விளம்பர நிலையத்தை
வில் முன் வாசல் பக்கமாகவுள்ள
அக்கருகாமையில் அமைத்துள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறோம். அண்ணா கோப்பியின்
வெற்றுப் பைக்கட்டுக்களைக் கொடுத்து
இனாம் பொருட்களைப் பெற்றுக்
கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்

இணுவில்



# உதயன்

11 08 1989 வெள்ளிக்கிழமை



அண்ணா கோப்பியின்

வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து
கீழ்க்காணும் பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

100g வெற்றுப் பைக்கட்டுக்கள் 10க்கு
அல்லது
50g வெற்றுப் பைக்கட்டுக்கள் 20க்கு
அல்லது
25g வெற்றுப் பைக்கட்டுக்கள் 40க்கு
ஒரு எவர்சில்வர் ரம்ளர்


## ஜே. ஆர். -ராஜீவ் ரகசிய உடன்பாடு; தமக்கு தெரியாது என்கிறார் ரஞ்சன்!

கொழும்பு, ஆக 11

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே 1987ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி ஏற்பட்ட இரகசிய உடன்பாடுபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின முன்கண்ட தகவலை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இதுசம்பந்தமாக சு.க. எம். பிக்களான திரு. லஷ்மன் ஜெயக்கொடி, திரு நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் கேள்விகளை எழுப்பினர்.

திரு சிறிபால டி சில்வா மாகாணசபை அமைக்கப்பட்டபின்னர் கூடுதல் அதிகாரங்களை வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி இந்தியாவுக்குக் சடிதமூலம் உறுதியளித்திருக்கிறார் 1987 நவம்பர் மாதத்தில் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது அப்படி ஒரு சடிதம் எழுதப்பட்டதா?

லஷ்மன் ஜயக்கொடி; எங்கே அந்தக் சடிதம்? உங்களுடைய கோவையில் இல்லையா?

அமைச்சர் ரஞ்சன்: அப்படியான சடிதம்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஜயக்கொடி: உண்மையிலே உங்களுக்குத் தெரியாதா?

ரஞ்சன்: தெரியும் என்று உண்மைக்குப் புறம்பான ஒன்றைச் சொல்லவேண்டும் என எதிர்பார்க்கிறீரா?

ஜயக்கொடி: உங்கள் அமைச்சுக்குத் தெரியுமா?

ரஞ்சன்: அமைச்சை நான் கேட்கவில்லை,

சிறிபால டி சில்வா; புதுடில்லிப் பேச்சுக்களுக்குச் சென்றபோதும் உங்களுக்கும் அக்கடிதம்பற்றித் தெரியவில்லையா?

ரஞ்சன்: அக்கடிதம்பற்றிய விடயம் எழுப்பப்படவில்லை.

(உ-எ)

## 1,034 வெற்றிடங்களுக்கு 25,000 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஆக.11

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்கு யாழ்மாவட்டத்தில் ஆயிரத்து 34 வெற்றிடங்களே உள்ளபோதும் 25 ஆயிரத்துக்கு மேல் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

கடந்த எட்டாம் திகதியுடன் விண்ணப்பம் அனுப்பும் காலக்கெடு முடிவடைந்தபோதும் பலர் அதன்பின்பும் விண்ணப்பங்களைக் கையளிக்க வந்தனர். ஆனால் அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை.

இதேநேரம் மாகாணப் பணிப்பாளருக்குக் கிடைத்த விண்ணப்பப் படிவங்கள் ஒரு சில தினங்களில் திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துசேரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### கண்டியில்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அவர்களும் தான் பாதுகாப்புப்படையினரால் சுடப்பட்டனர்.

திரு கிரியெல்ல: ஊர்வலங்கள் அமைதியாக நடத்தப்படவில்லை என்றால் உயிரிழந்த பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை என்ன?—

அமைச்சர்: நான் அதை விசாரித்துப் பார்க்கவேண்டும்.

(உ-எ)

### தெற்கில்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர்.

தெற்கில் நடைபெற்ற ஏனைய சம்பவங்கள் வருமாறு:-

★ அரணுபக்க பொலீஸ் பகுதியில் தீவிரவாதிகள் கூட்டதில் விசேட அதிரடிப் பொலீஸ் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

★ பன்விலவில் 3 சிப்பாய்கள் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ மாத்தறை மாவட்டத்தில் பக்மீகம, கொஸ்கொட, ஒருவல ஆகிய பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலின் போது ஏழு ஜே. வி. பி. தீவிரவாத சந்தேக நபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## சாவகச்சேரியில் தமிழ்நாட்டு பத்திரிகையாளர்

பச்சிலைப்பள்ளி, ஆக 11

சாவகச்சேரிக்கு நேற்று தமிழக பத்திரிகையாளர் சிலர் விஜயம் செய்திருந்தனர்.

ஹெலிக்கொப்டர் மூலம் வருகை தந்த இவர்கள நகர்ப்பகுதியில் சேதமடைந்த பகுதிகளைப் படம்பிடித்ததுடன் சந்தைக்கு வருகை தந்த பலரைப் பேட்டி கண்டனர்.

(ஓ-117)

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஆக 11

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களின மூன்றும் ஆண்டு பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 11ஆம் திகதியும், கலைப்பீடத்தின் இரண்டாம் மூன்றும் ஆண்டு பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 15 ஆம் திகதியும் வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## கேதீஸ்வர அகதிகளுக்கு உதவி

குருநகர், ஆக11

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் அடம்பன், மாந்தை, எள்ளுப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன.

அகதிகளுக்கு மன்னார் உதவி அரசாங்க அதிபர் ஊடாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன

(ஓ-51)

### உண்ணாவிரத---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தரமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பதில் முதலமைச்சர் அச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

(உ-21)

### வடமராட்சி சம்பவங்கள்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன.

உண்மையில் இச் சம்பவங்கள் தமிழ் பேசும் மக்களுக்குப் புதியன அல்ல. காலாதிகாலமாக தமிழ் பேசும் மக்கள் தமது நாளாந்த வாழ்வின் எதிர் நோக்கியனவே ஆகும். தமது இழப்புக்களுக்கு எதுவிதத்திலும் சம்பந்தப்படாத பொதுமக்களைப் பழிவாங்குவதும் பயமுறுத்திப் பணிய வைப்பதன் மூலமாக தமது செயல்களையிட்டு மௌனமாக இருக்குமாறு பொதுமக்களை நிர்ப்பந்திப்பதும் இறந்த காலத்திலும் இன்றும் சகல தரப்பினராலும் கையாளப்படும் தந்திரோபாயம் ஆகிவிட்டது.

காலப்போக்கில் துப்பாக்கிகளால் மக்கள் ஆளப்படுகின்ற — எவருக்கு எது நடந்தாலும் அவற்றையிட்டுக் கவலைப்படாத — துப்பாக்கிகளுக்குப் பயந்து மௌனமாயிருக்கின்ற — யாருடைய துப்பாக்கி பலமாக உள்ளதோ அவர்களுக்குத் தலையாட்டும் சமுதாயம் நிலைத்து நிற்கும் சூழலையே இது உருவாக்கும்.

அண்மைய வடமராட்சிச் சம்பவங்கள் எவ்வகையிலும் ஜனநாயக சூழலின் உருவாக்கத்திற்கோ, சகல தரப்பினரது பாதுகாப்பை உறுதி செய்வதற்கோ உதவிவிட முடியாதென்பதையும், தொடர்ந்தும் மக்களைத் துப்பாக்கி முனையில் அடக்க நினைக்கும் சக்திகளுக்கே ஊக்கமளித்து இப்பிரதேசத்தில் இராணுவ ஆட்சிப் பிரகடனத்துக்கே வழிவகுக்கும் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மக்களின் ஜனநாயக உரிமைகளையும், சகல தரப்பினரதும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டுமென்பதை உளமார நேசிப்பதாக கூறும் சகல சக்திகளும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்; மக்களைப் பயமுறுத்தி அடிபணிய முயற்சிக்கும் சகல நடவடிக்கைகளையும் எதிர்க்க வேண்டும் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு, கிழக்கில் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் சரிவர அமுல்நடத்த முடியாமல் உள்ளது. இதேநிலைதான் ஏனைய மாகாணசபைப் பிரதேசங்களிலும் நிலவுகிறது;

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக அமைதிப்படை முழுவதுமாக வெளியேறிச் செல்லும் வரை அரசு காத்திருக்காது:

அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமேயானால் அவை கூடிய விரைவில் அகற்றப்படும்.

இந்தியாவில்கூட அங்குள்ள மாநிலங்களுக்கு முறையாக அதிகாரப்பகிர்வு வழங்க இந்திய அரசுக்கு 30 ஆண்டுகள் எடுத்தது.

தமிழ்க் குழுக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் இலங்கையும் இந்தியாவும் பாடுபடுகின்றன.

சமாதானக் கமிட்டி நிறுவப்பட்டதும் தமிழ்க் குழுக்களிடையே சமாதானநிலை உருவாக்க முயற்சி எடுக்கப்படும். பதினைந்துநாள் யுத்த நிறுத்தமும் அமுல் செய்யப்பட்டு அதனை மேலும் விரிவுபடுத்த முயற்சி எடுக்கப்படும்.

சமாதானநிலை ஏற்பட்டதும் அதிகாரப்பரவலாக்கலும் அதனை அமுல் செய்வதும் துரிதமாக மேற்கொள்ளப்படும்—இப்படி அமைச்சர் சொன்னார்.

(உ-1)

### இரங்கல் தீர்மானம்

திருகோணமலை ஆகஸ்ட் 11

வடக்கு - கிழக்கு மாகாண சபை நேற்று கூடிய போது மறைந்த தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு: யோகேஸ்வரன் ஆகியோருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

(உ-9)

## முஸ்லிம் காங்கிரஸின் மாகாண உறுப்பினருக்கு பாதுகாப்பு வழங்கப்படும்

கொழும்பு, ஆகஸ்ட் 11

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிடுவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட எம். பி. ஜனாப் எம். எச். எம். அஷ்ரப்பின் கேள்விகளுக்கு பதிலிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்:

அமைச்சர் மேலும் சொன்னதாவது:

கடந்த மாதம் முதலாம் திகதி அக்கரைப்பற்றில் மாகாணசபை உறுப்பினர் எம். ஐ. உதுமான் கொல்லப்பட்டது எனக்குத் தெரியும்.

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படுவதில் திட்டமிட்ட பாரபட்சம் காட்டப்படவில்லை.

இதுவரை காலமும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது எனக்கு தெரியாமலிருந்தது.

-இப்படி அமைச்சர் விஜேரத்தின தெரிவித்தார்.

(ஓ-எ)

### பிரச்சினைகளை வளர்த்தது--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கு வந்த ஐ. தே. கட்சி அரசாங்கம் இந்திய அரசுக்கு எதிரான கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. அதனால் வந்த வினையே இது.

ஐ. தே. கட்சி அரசின் வெளிநாட்டுக் கொள்கை காரணமாகவே இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடும் நிலை உருவாகியது.

எனது ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடனான பல பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டன கச்சதீவுப் பிரச்சினை, கடல் எல்லைத் தகராறு மற்றும் நாடற்றவர் பிரச்சினைகள் போன்ற பல விடயங்களுக்கு மதீர்வு காணப்பட்டது.

புதுடிலலிப் பேச்சுக்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையில் பேச்சுக்கள் பற்றிய முழு விவரங்களும் அடங்கியிருக்கவில்லை. அரசாங்கம் பல விடயங்களைத் தனது அறிக்கையில் மறைத்துவிட்டது.

இந்த விவாதத்தின் போது இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றியோ, இந்தியப் படைகள் இலங்கைக்கு வரவேண்டிய நிலையை உருவாக்கிய காரணங்கள் பற்றியோ கருத்துத் தெரிவிக்க எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த விவாதத்தை நாம் கோரவில்லை. எம்மீது இந்த விவாதம் திணிக்கப்பட்டிருக்கிறது — என்றார்:

(உ-1)

## இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 11

கோண்டாவில் பகுதியில் உள்ள சைக்கிள் கடை ஒன்றில் இருந்து கூட்டிச்செல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் நேற்று துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

செல்வரட்ணம் சற்குணராசா (வயது 27) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

(ஓ-3-10)

## என்னை பின்பற்றுமாறு பிரேமாவை நான் எப்படிக் கேட்பது? - ஜே. ஆர்

கொழும்பு, ஆகஸ்ட் 11

என்னைப்போன்று ஜனாதிபதி பிரேமதாஸா நடந்துகொள்கிறார் இல்லை. ஒரு தலைவரை என்னைப்போல் நடந்துகொள்ளும்படி எப்படி நான் கேட்டுக்கொள்வது?

—இப்படி முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியப் பத்திரிகையாளர்கள் சிலருக்கு அளித்த பேட்டி ஒன்றில் சொன்னார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சாதனை எப்படி இருக்கிறது. அதுபற்றி அபிப்பிராயம் சொல்வீர்களா? — இப்படி செய்தியாளர்கள் திரு. ஜெயவர்த்தனவைக் கேட்டனர்.

அதற்கு திரு. ஜெயவர்த்தன புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். பதில் கூறவில்லை.

மீண்டும் கேட்டதற்கு திரு ஜெயவர்த்தன, "நான் கருத்து ஒன்றையும் தெரிவிக்க விரும்பவில்லை. அப்படி நான் தெரிவிக்கும் கருத்துக்கள் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடும் அல்லவா!"

ஜனாதிபதி பிரேமதாஸா சரியான பாதையில் செல்கிறார் என்று நினைக்கிறீர்களா? — இப்படி செய்தியாளர் கேட்டனர்.

இதற்கு திரு. ஜெயவர்த்தன:-

"அவர் எனது வழியில் செல்லவில்லை. ஒரு தலைவரை என்னைப்போல் நடந்துகொள்ளும்படி நான் கூறலாமா?"

கேள்வி:- விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஜனாதிபதி பிரேமதாஸ பேச்சுக்கள் நடத்துவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜே. ஆர்: இதற்கு நான் பதிலளிக்கமாட்டேன். நான் ஒரு கேள்வி கேட்கிறேன்.

இந்தியத் துருப்புக்கள் ஏன் தங்களுடைய இராணுவ நடவடிக்கைகளை முடித்துக்கொள்கிறார்கள் இல்லை?

இரண்டு ஆண்டுகளாக இந்தியத் துருப்புக்கள் இங்கு உள்ளனர் இது நீண்ட காலம் இல்லையா? அவர்கள் தங்கள் இராணுவ நடவடிக்கையை முடிக்க இயலாது இருப்பது. எம் மக்கள் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தி விடுகிறது.

கேள்வி:- சார்க் உச்சி மாநாட்டை இலங்கை பகிஷ்கரிப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

ஜே. ஆர்:- நான் இதற்கு பதில் சொல்ல முடியாது ஆனால் சார்க் அமைப்பு உயிர் பிழைத்து வாழும் என்பது மட்டும் நிச்சயம்.

கேள்வி:- நீங்கள் கூறும் தேசிய அரசுக்கு நீங்களே தலைமை வகிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி உட்பட சகல எதிர்க்கட்சிகளும் வேண்டுகோள் விடுத்தால் ஏற்றுக் கொள்வீர்களா?

ஜே. ஆர்:- இல்லை: நன்றி. எனக்கு இதில் அக்கறை இல்லை. அரசியலில் இருந்து வெளியேறும் எனது முடிவு இறுதியானது; அதை மாற்ற முடியாது:

கேள்வி:- அப்படி என்றால்... தேசிய அரசுக்குத் தலைமை வகிக்கக்கூடிய ஒருவரின் பெயரைச் சொல்வீர்களா?

ஜே. ஆர்:- இதற்கு பதில் சொல்ல முடியாது.

(ஓ-எ)

## ஷெல் தாக்குதலில் வீடுகள் சேதம்

தண்ணீரூற்று மாமூலைப் பகுதியில் கடந்த செவ்வாயன்று மாலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது:

சுமார் 3 மணித்தியாலங்கள் இடம்பெற்றமோதலின் போது ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன இதனால் இரண்டுவீடுகள் பலத்த சேதமடைந்தன.

(ஓ-92)

### சார்க்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகவலை வெளியிட்டார்.

உள்நாட்டு நிலைமைகள் காரணமாக எதிர்வரும் மார்ச் மாதம் வரை இந்த மாநாட்டில் கலந்துகொள்ள முடியாதிருப்பதாக இந்தியா தற்போது அறிவித்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

சார்க் தலைவர்கள் மாநாட்டுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு நடைபெறும் என்றும் அவர் சொன்னார்.

(உ-1)

## OBITUARY

### JOSEPH SYLVESTER MACHADO

The death is announced of Joseph Sylvester Machado, beloved husband of Bridget, loving father of Shiranee, Malini and Raj loving brother of late Mary Anne, Hillary, Gertrude and Anton. The Funeral took place on 10th August, 1989.

Informant : RAJ

22, St Anthony's Square,
Averiwatte Road,
Wattala

(1504)

## மரண அறிவித்தல்கள்

### திரு. செல்லையா சொர்ணலிங்கம்

(பொலீஸ் உத்தியோகத்தர்)

புங்குடுதீவு 1-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. செல்லையா சொர்ணலிங்கம் (பொலீஸ் உத்தியோகத்தர்) 09-08-1989 அன்று காலமாகிவிட்டார்.

இவர் 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகநாதர் செல்லையா பொன்னம்மா அவர்களின் மகனும், கமலாம்பிகையின் கணவரும் ஆவார்:

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்: மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1 ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(1480)

### திரு. இராமநாதர் கருணாகரன்

தொல்புரத்தில் வசித்தவரும், அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. இராமநாதர் கருணாகரன் 10-08-1989 இல் காலமானார்.

இவர் ஞானோதயத்தின் (ஆசிரியை, நுவரெலியா) அன்புக் கணவரும், தம்பிப்பிள்ளை இராமநாதர், இராமநாதர் சரஸ்வதியின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற வரலக்சுமி, திருஞானகரன் (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரபாகரன் (தபால் திணைக்களம், கொழும்பு), பாலசுப்பிரமணியம், சியாமளாவின் மைத்துனரும், திருமதி கருணரட்ண மங்கையர்க்கரசி ஆகியோரின் பெருமகனும், பரமானந்தம் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மருமகனும், கார்த்திக, சயந்தன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை நாளை 12-08-1989 நண்பகல் 12-00 மணிக்கு தொல்புரத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. இராமநாதர்

தொல்புரம்,
சுளிபுரம்.

(11720)

### திரு. சுப்பிரமணியம் குருநாதன்

(சட்டத்தரணி)

இல. 125, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு: சுப்பிரமணியம் குருநாதன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு: இ: சுப்பிரமணியம் (பிரசித்த நொத்தாரிஸ்), திருமதி இராசம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு: சு. சோமசுந்தரம் (இளைப்பாறிய சித்திர ஆசிரியர்), திருமதி சோ: செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சற்குணேஸ்வரியின் அன்புக் கணவரும், கருணாகரன், கிருபாகரன், பிரபாகரன், திருமகள், உருத்திராகரன், நாமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 12-08-89 நாளை காலை 10-00 மணிக்கு இல. 13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டிக்குளியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டிக்குளி.

(11721)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ... 11 - 08 - 1989 இல் ... வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org